சமூக நலம்
மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2018 – 2019

## மானியக் கோரிக்கை எண்.45

**Dr. V. சரோஜா**
சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | சமூக நலம் | 9 |
| 2.1 | குழந்தைகள் நலம் | 11 |
| 2.2 | மகளிர் நலம் | 29 |
| 2.3 | மூத்த குடிமக்கள் நலன் | 64 |
| 2.4 | மூன்றாம் பாலினர் நலன் | 74 |
| 2.5 | தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் | 76 |
| 2.6 | தமிழ்நாடு  சமூக நல வாரியம் | 78 |
| 2.7 | மாநில விருதுகள் | 82 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 85 |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 105 |
| 5 | சமூகப் பாதுகாப்பு | 153 |
| 6 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 201 |
| 7 | முடிவுரை | 208 |
|  | இணைப்பு | 210 |

## கோரிக்கை எண் 45

# சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2018–2019

### அத்தியாயம் – 1

**முன்னுரை**

தமிழ்நாடு அரசு பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான சிறப்புத் திட்டங்களை சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் மூலமாக செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மொத்த மக்கள் தொகையில் 70 சதவீதமாக உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள், வளர்ச்சிக்கான அடித்தளமாக இருப்பதால், நீட்டித்த, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி அவர்களிடமிருந்தே துவங்குகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொண்டுள்ள சவால்களான, சமநிலையின்மை, வறுமை, பன்முக தளங்களில் மறுக்கப்பட்ட உரிமைகள், பாலின சமத்துவமின்மை, ஊட்டச்சத்து குறைபாடு, சமூக புறக்கணிப்பு போன்ற பல குறைபாடுகளுடன் கூடிய பாரம்பரிய கட்டமைப்பு சுழற்சி முறையைத் தகர்த்தெறிவதே வளர்ச்சியின் முதற்படியாகும்.

ஐக்கிய நாடுகளின் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீட்டித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களில், 5 ஆவது குறிக்கோள் பெண்களுக்கான பாலின சமத்துவம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றை அடைவதை நோக்கமாக கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு பெண்களுக்கு சுயஅதிகாரம் மற்றும் அனைத்து நிலைகளிலும் சமவாய்ப்புகள் வழங்குவதிலும், குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வாழ்வு அளிக்க வேண்டும் என்பதிலும், கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

பெண் குழந்தைகளின் நிலையினை முன்னேற்ற, சமூகநலத் துறையின் மூலமாக, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பெண் குழந்தைகள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதுடன், பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை பெருமையுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகிறது. தனித்துவம் வாய்ந்த தொட்டில் குழந்தை திட்டம், பெண் சிசுக் கொலையை தடுப்பதுடன், ஆதரவின்றி கைவிடப்படும் குழந்தைகள் உரிய முறையில் தத்தெடுக்கப்படும் வரையிலான காலம்வரை உரிய கவனிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்குவதையும் உறுதிசெய்கிறது. குழந்தை திருமண தடைச்

சட்டம், 2006–னை முறையாக செயல்படுத்துவதன் மூலம் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியம் மேம்படுத்தப்படுவதுடன், இளவயது கர்ப்பம் சார்ந்த இடர்பாடுகளும் தவிர்க்கப்படுகிறது.

ஏழைப் பெற்றோர்களுக்கு உதவும் விதத்தில் பெண் குழந்தைகளின் திருமணத்திற்கு நிதி உதவி அளித்து உரிய வயது வரை, பெண்களின் கல்வி நிலையை உயர்த்த சமூகநலத்துறை மூலமாக முன்னோடித் திட்டமாக திருமண உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக பள்ளிக் கல்வி முடித்தவர்களுக்கு ₹25,000, பட்டயம் மற்றும் பட்டம் படித்தவர்களுக்கு ₹50,000 மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 8 கிராம் தங்க நாணயம் அளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் எனும் முன்னோடித் திட்டம் குழந்தைகள், இளம் பெண்கள், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி, தன் சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில், காணும் பிரச்சினைகளை தீர்க்கும் நலப் பணிகளைச் செய்து வருகிறது. இத்திட்டம் அனைத்து

பயனாளிகளையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சியை இலக்காக கொண்டுள்ளது.

குழந்தைகளின் பிறப்பு முதல் 6 வயது வரையான காலத்திற்கு அவர்களுக்குத் தேவையான இணை உணவு, கூடுதல் சத்துணவு, சூடான சமைத்த உணவு வழங்குதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் முன்பருவக் கல்வி வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் பணிகளாக அமைந்துள்ளது. வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குவதுடன் சுகாதாரம், கல்வி, விழிப்புணர்வு மற்றும் அவர்தம் திறன் வளர்க்கும் சேவைகளையும் வழங்கி வருகிறது. மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்கள் "எழுச்சிமிகு முன்பருவ வளர்ச்சி மையம்" என்ற வகையில் "முதல் கல்விக்கூடம்" ஆக முன்னிறுத்தப்பட்டு, கற்றல், சத்துணவு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை கூடுதல் கட்டமைப்பு மற்றும் பணியாளர்களைக் கொண்டு செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் 1982 ஆம் ஆண்டு பள்ளிக்குழந்தைகளுக்கு மதிய உணவுத்

திட்டம் அமுல்படுத்தப்பட்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பள்ளி இடை நிற்றல் சதவிகிதத்தை குறைக்கவும், குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்குதலையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்கு மசாலா முட்டையுடன் 13 வகையான கலவை சாதம் இத்திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இது வழங்கப்படும் உணவின் ஊட்டச்சத்து மற்றும் கலோரிச் சத்தினை அதிகரித்து இருப்பதுடன், குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும் அமைந்துள்ளது.

துயருறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதுகாக்க ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டம், 1956, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 ஆகியவற்றினை நடைமுறைப்படுத்திடும் பணியினை சமூக பாதுகாப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு

முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்காக குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள், மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கான இல்லங்களை நடத்தி வருகின்றது.

மூன்றாம் பாலினத்தவரின் நிலையினை மேம்படுத்தும் விதமாக அவர்களுக்கு அடையாள அட்டை, கல்வி உதவித்தொகை, குடியிருப்பு வசதி, ஓய்வூதியம், வாழ்வாதாரத்திற்கான பயிற்சிகள் மற்றும் நிதியுதவி அளித்தல் ஆகியவற்றை தமிழக அரசு செய்து வருகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளை தங்கள் குழந்தைகளுடன் தங்கி பெற்றிட ஏதுவாக சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. தமிழக அரசு வன்முறையினால் பாதிக்கப்பட்ட மற்றும் துயரத்தில் ஆழ்ந்துள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளித்தல், தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, மருத்துவம், சட்டஉதவி ஆகியவற்றை அளித்திடும் நோக்கத்துடன் குறுகிய கால தங்கும் (Swadhar Greh) இல்லங்களை நடத்தி வருகிறது. மேலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய, வேலைக்கு செல்லும் பெண்களின் நலனுக்காக அவர்களுக்கு உகந்த, பாதுகாப்பான

பணிபுரியும் பெண்கள் விடுதிகளை சமூகநலத்துறை நடத்தி வருகிறது.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் முன்னேற்றம் கருதி அவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்களை சமூகநலத் துறை வழங்கி வருகிறது. இத்துறை மூலமாக செயல்படும் பெண்கள் தொழில் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான சீருடையினை, அவரவர் இல்லங்களிலிருந்தே தைத்துக் கொடுப்பதன் மூலம் கணிசமான வருமானம் பெற்று வருகின்றனர்.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை மூலமாக நடத்தப்பட்டுவரும் ஒருங்கிணைந்த முதியோர் இல்லங்களில் மூத்த குடிமக்களின் வாழ்க்கை நலன் ஊக்குவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் கௌரவம் மிக்க செயலாற்றும் திறனுடைய வாழ்வு உறுதி செய்யப்படுகிறது.

வருவாய்த் துறை மூலமாக சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப் படுத்துவதில் சமூகநலத் துறை ஒரு ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

இந்த துறையானது ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, வரட்சணை தடுப்புச் சட்டம், 1961, பெண்களுக்கான குடும்ப வன்முறை பாதுகாப்புச் சட்டம், 2005, குழந்தை திருமண தடுப்புச் சட்டம், 2006, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம்,2007, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012, பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013, தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, ஆகிய சட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சமூகத்தின் பலதரப்பட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கான கொள்கைகளை உருவாக்கி, பல்வேறு நிகழ்ச்சிகள், திட்டங்கள் மற்றும் சமூகநீதிச் சட்டங்களை செயல்படுத்துவதில், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

******

# அத்தியாயம் – 2

## சமூக நலம்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை செயல்படுத்தி வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு முக்கிய திட்டங்கள், குழந்தை திருமணம் மற்றும் பெண் சிசுக்கொலை ஆகிய கொடிய வழக்கங்களை ஒழித்து, மாநிலத்தில் பாலின சமன்பாடு மற்றும் குழந்தை பாலின விகிதத்தினை மேம்படுத்துவதற்கு உதவி வருகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் குற்றங்களின் மீது நடவடிக்கை எடுத்து அவர்களின் உரிமையை நிலைநாட்ட முறையாக கட்டமைக்கப்பட்ட மாநில கொள்கைகள் பெரிதும் உதவியுள்ளது.


மாநில அரசு, முதியோர்கள் சமூகத்தில் தங்களுக்கான சட்டபூர்வமான இடத்தினை நிலைநிறுத்தி கொள்ளவும், அவர்களது அந்திம காலத்தினை அமைதியுடனும், கௌரவத்துடனும் பயனுள்ளதாக கழிக்க ஏதுவாக பல நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. முதியோர்களுக்கான நலத் திட்டங்கள், நிதி பாதுகாப்பு , உணவு, உடல் நலன், உறைவிடம் மற்றும் நலிவுற்ற, தனித்துவிடப்பட்ட

முதியோர்களுக்கான உணர்வு பூர்வமான தேவைகளை பூர்த்தி செய்து வளர்ச்சிக்கான சமமான பங்கினை அளிக்கிறது.

தமிழக அரசு மூன்றாம் பாலினர்களை உறுப்பினர்களாக கொண்ட ‘‘மூன்றாம் பாலினருக்கான நல வாரியம்’’ அமைத்து, அவர்களது சமூக உட்சேர்க்கைக்கான வழிவகையினை செய்து நாட்டிலேயே முதன் மாநிலமாக திகழ்கிறது. புறக்கணிக்கப்பட்டு பின்தங்கியிருந்த மூன்றாம் பாலினத்தினர் அவர்களுக்கான அடையாளத்தை அளித்து அவர்களது வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் அரசின் திட்டங்களால் நம்பிக்கை பெற்றுள்ளனர்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளை சார்ந்தவர்களுக்காக செயல்படுத்தப்படும் புதுமையான திட்டங்கள், மாநிலத்திற்கு பாராட்டுகளை குவித்துள்ளதோடு, நாட்டிற்கே எடுத்துக்காட்டாக உள்ளன.

## சமூக நலத் துறையின் சேவைகள் மற்றும் நிறுவனங்கள்




## 2.1 குழந்தைகள் நலம்

குழந்தைகள் நலம் என்பது 18 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான பராமரிப்பு, அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலம் காக்க அரசு தொடர்ந்து செயல்படுத்தி வரும் சேவைகள் மற்றும் திட்டங்களை குறிப்பதாகும். அனைத்து குழந்தைகளின், உரிமைகளை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க அரசு உறுதி கொண்டுள்ளது. மேலும் நலிவுற்ற சூழ்நிலையில் வளர்ந்து

வரும் பெண் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகள் மீதும் அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

பெண் குழந்தைகளின் நலன் காக்க இத்துறை கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. தொட்டில் குழந்தைத் திட்டம்
2. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
3. பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்
4. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

### 2.1.1 தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் சிசுக்கொலை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு, இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழக அரசால் "தொட்டில் குழந்தைத் திட்டம்" 1992–ல் சேலம் மாவட்டத்தில் துவக்கப்பட்டது. வறுமை, ஆண் குழந்தையை விரும்புதல், பெண் குழந்தைகளின் திருமண செலவுகள், பிற கலாச்சார நடைமுறைகள் மற்றும் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளைப் பராமரிக்க இயலாமை போன்றவை பெண்

சிசுக்கொலை வழக்கத்தில் நிலவி வருவதற்கான காரணங்கள் ஆகும். பெற்றோரால் நிராகரிக்கப்படும் இத்தகைய குழந்தைகள் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் காப்பகங்கள் மூலம் பெறப்பட்டு பின் தத்து கொடுக்கப்படுகின்றனர்.

தொட்டில் குழந்தை திட்டம் 2001 ஆம் ஆண்டில் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட மாவட்டங்களில் குழந்தைகளின் உடனடி தேவைகளை கவனிப்பதற்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள் திறக்கப்பட்டன.

திட்டத்தின் வெற்றிகரமான செயல்பாட்டினால் குழந்தை பாலின விகிதம் உயர்ந்ததையடுத்து, இத்திட்டம், பாலின விகிதம் குறைவாக இருந்த கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு 2011– ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டது.

தொட்டில் குழந்தை திட்டம் தொடங்கியது முதல் மார்ச் 2018 வரை 5,131 (ஆண் – 1017, பெண் – 4114) குழந்தைகள் பெறப்பட்டுள்ளனர்.

**2018–19ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹38.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.2 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

1992–ஆம் ஆண்டு துவக்கப்பட்ட முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் பெண் குழந்தைகளின் நலனுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாகும். முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் நோக்கம் பெண் குழந்தை பாலின பாகுபாட்டை தடுத்து அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசால் நேரடியாக உதவி புரிவதாகும்.

**திட்டத்தின் நோக்கம்:-**

- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், அவர்களுக்கு குறைந்த பட்சம் 10–ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஊக்குவித்தல்.

- 18வயதுக்கு பிறகே திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.
- இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தவுடன் குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரத்தினை வழங்குதல்.
- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்த குடும்பத்தின் பங்கினை உறுதி செய்தல்.

**திட்டத்தின் வகைகள்**

**திட்டம்–1**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை மட்டும் **01.08.2011** அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்து இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக **₹50,000** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த

வைப்புத் தொகையின் இரசீது நகல் பெண் குழந்தையின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

**திட்டம்–2**

இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருக்கும் பட்சத்தில், இரண்டாவது பெண் குழந்தை **01.08.2011** அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்து இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா **₹25,000** தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. இந்த வைப்புத் தொகையின் இரசீதுகளின் நகல்கள் பெண் குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு **18** வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை, அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும்

முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தையின் உயர்கல்விக்கு உதவுகிறது. படிப்பை இடைநிறுத்தம் செய்யும் பெண் குழந்தைகளுக்கு, வைப்பீடு தொகை தள்ளுபடி செய்யப்பட்டு, அரசு கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

## முதிர்வுத் தொகை விவரம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் பெண் குழந்தைகளின் பெயரில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மாதந்தோறும் திரளும் வட்டியுடன் கூடிய தொகை வழங்கும் பணப்பெருக்கு திட்டத்தின் கீழ் தொகை முதலீடு செய்யப்படுகிறது.

| வ. எண் | திட்டங்கள் | ஆரம்ப வைப்பீட்டுத் தொகை (ரூ.) | 18 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தைகளுக்கு வழங்கப்படும் முதிர்வுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | திட்டம்–1 | 50,000 | 3,00,232 |
| 2 | திட்டம்–2 | 25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | 1,50,117 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) |

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற குடும்பத்தின் ஆண்டு வருமானம் **₹72,000**க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் மார்ச் 2018 வரை, ₹1,370.20 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டு 9,12,528 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹140.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.3 பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்

குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரி அளவான 918 விட குறைவாக இருந்த 100 மாவட்டங்களில், "பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற திட்டம், கடந்த 2015ஆம் ஆண்டு ஒரு முன்னோடித் திட்டமாக மத்திய அரசால் துவக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இத்திட்டம் கடலூர் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்:-**

i. பாலின பாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து கொல்லப்படுவதை தடுத்தல்.

ii. பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

iii. பெண் குழந்தையின் கல்வி மற்றும் பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**இலக்கு பிரிவினர்:-**

| | |
|---|---|
| முதல் நிலை | இளம்வயது மற்றும் புதுமணத் தம்பதியர், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பெற்றோர். |
| இரண்டாம் நிலை | இளம் வயது, வளரிளம் பருவத்தினர் (சிறுமியர் மற்றும் சிறார்) புகுந்த வீட்டினர், மருத்துவர்கள்/தொழில் பழகுபவர்கள், தனியார் மருத்துவமனை, மருத்துவ இல்லங்கள் மற்றும் ஆய்வு மையங்கள். |
| மூன்றாம் நிலை | அலுவலர்கள், பஞ்சாயத்து அமைப்புகள், முதன்மை நிலை பணியாளர்கள், மகளிர் சுயஉதவி குழுக்கள் / கூட்டமைப்பு, மதம் சார்ந்த தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஊடகம், மருத்துவ சங்கங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள். |

**திட்டத்தின் கூறுகள்:-**

i. பல்துறை சார்ந்த நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு

ii. தொலைத்தொடர்பு ஊடக செய்திகள்

**திட்ட செயல்பாடுகள்:-**

i. மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வு மற்றும் கல்வி முனைப்பு இயக்கங்களை நடத்துதல்.

ii. **1994** ஆம் ஆண்டின் முன் கருத்தரிப்பு மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனை நுட்பங்கள் சட்டத்தை வலுவாக அமுல்படுத்துதல்

iii. பெண் குழந்தைகளின் கல்விக்கும், பாதுகாப்பிற்கும், உயிர்வாழ்வதற்கும், சமூகத்தில் பங்கேற்பதற்கும் உறுதி செய்கின்றது.

தேசிய அளவில் உள்ள குழந்தை பாலின விகிதமான **918–**ஐ விட மிகவும் குறைவாக இருந்த கடலூர் மாவட்டத்தில் "பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற திட்டம், செயல்படுத்தப்பட்டது. மேற்படி இத்திட்டம் கடலூர் மாவட்டத்தில் **3** ஆண்டுகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பிறகு, குழந்தை பிறப்பு பாலின விகிதம் (Sex Ratio at Birth) **886–**ல் இருந்து **915–**ஆக உயர்ந்துள்ளது. உயர் தொடக்கப் பள்ளி மற்றும் இடைநிலை பள்ளிகளில் மாணவிகளின் இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது. பெண் குழந்தைகளுக்குக்கான உறைவிட

பள்ளிகள், கழிப்பறைகள், மற்றும் எரியூட்டிகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதால் பெண் குழந்தைகள் படிப்பை தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக கடலூர் மாவட்டம் சிறந்த மாவட்டமாக தேர்வு செய்யப்பட்டு, 24 ஜனவரி 2017, தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று மத்திய அரசால் தேசிய விருது வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திட, 2017–2018–ஆம் ஆண்டில் மத்திய அரசால் ₹30.88 லட்சம் வழங்கப்பட்டது.

**திட்ட விரிவாக்கம்**

“பெண்குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” திட்டத்தின் வெற்றிகரமான செயல்பாடுகள், தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கு திட்டம் விரிவுப்படுத்திட வழிவகுத்தது. 08.03.2018 அன்று பாரத பிரதமர் அவர்களால் இத்திட்டம் நாட்டின் 640 மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. குழந்தை பாலின விகிதத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் அரியலூர்,

தர்மபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அனைத்து நிலைகளிலும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைந்த செயல்பாட்டினை மேற்கொள்ளுவதற்கு, மாவட்டத்திற்கு ₹50.00 இலட்சம் வீதம் மொத்தம் ₹5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள 21 மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் மற்றும் அவர்களது கல்வியை உயர்த்துவதற்காக இத்திட்டம் தொலைத்தொடர்பு மற்றும் ஊடக செய்திகளின் வாயிலாக செயல்படுத்தப்படும்.

**உத்திகள்**

பல்துறை சார்ந்த அனைத்து பொறுப்பாளர்களுக்கும் திட்டம் குறித்து விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்துதல், குழந்தை பாலின விகிதம் குறைவாக உள்ள வட்டாரங்களுக்கு தனிக்கவனம் செலுத்துதல், சமூகத்தில் நிலவும் பாலினம் சார்ந்த மூடநம்பிக்கைகளை மக்களைக் கொண்டே முறியடித்தல், அவர்களை திட்டப்பணிகளில் ஈடுபடுத்துதல், உள்ளூர் தேவைக்கேற்ப புதிய வழிமுறைகளை கடைபிடித்தல், பாலினம் மற்றும் குழந்தைகள் உரிமை சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள தேவையான சேவைகளையும்,

நலத்திட்டங்களையும் நெறிப்படுத்துதல் ஆகிய உத்திகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

**திட்ட கண்காணிப்பு**

தலைமைச் செயலர் தலைமையில் சம்மந்தப்பட்ட துறை சார்ந்த பிரதிநிதிகள் அடங்கிய மாநில செயற்குழு, இத்திட்டத்தினை ஆய்வு செய்து, கண்காணித்து துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு பணிகளை உறுதி செய்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான செயற்குழுக்கள், கிராம அளவில் செயல்பாடுகளை திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் பணிகளை மேற்கொள்கிறது.

பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம், திட்டத்தினை கண்காணிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகளில், பிறப்பு பாலின விகிதத்தினை உயர்த்துதல், ஆரம்ப கால கர்ப்பம் சார்ந்த பதிவுகளை அதிகரித்தல், உயர்நிலைப்பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரித்தல், பெண்குழந்தைகளுக்கு பயன்படுத்தத்தக்க கழிப்பிடங்களை உருவாக்குதல், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பான

சூழ்நிலையை உருவாக்க முன் கருத்தரிப்பு மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனை நுட்பங்கள் சட்டம் 1994 மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தடுப்புச் சட்டம் 2012 ஆகியவற்றை வலுவாக செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**2018–19ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்ட 10 மாவட்டங்களுக்கு ₹5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.4 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்கள், மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகளை தவிர்ப்பதால் அவர்கள் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் இல்லங்களில் பராமரிக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளை பராமரிக்க தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கீழ்க்கண்ட நான்கு இல்லங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

1. பிரேமவாசம், காஞ்சிபுரம்
2. ஸ்ரீஅருணோதயம் டிரஸ்ட், சென்னை
3. குழந்தைகளுக்கான குடும்பங்கள், கோயம்புத்தூர்
4. கம்யூனிட்டி ஹெல்த் எஜுகேஷன் சொசைட்டி (CHES), திருவள்ளூர்

தற்போது இவ்வில்லங்களில் 136 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ₹120 வீதம் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

**2018–2019 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.5 குழந்தை திருமண தடைச் சட்டம் , 2006

இந்தியாவில் பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் திருமணத்திற்கான சட்டபூர்வ வயதாக உள்ளது. இந்த வயதுகளின் கீழ் நடைபெறும் எந்த திருமணமும் சட்டத்தை மீறிய செயலாக கருதப்படுகிறது. குழந்தை திருமணம் என்பது ஆணுக்கு நடந்தாலும் அல்லது பெண்ணுக்கு நடந்தாலும், குழந்தைகளின் உரிமைகளை அத்துமீறும் செயலாக உள்ளது. குழந்தைகளிடமிருந்து அவர்களின் குழந்தை தன்மையை புறந்தள்ளி, அவர்களின் அடிப்படை உரிமைகளான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்றவற்றை மறுப்பதுடன், குழந்தைகளை வன்கொடுமை,

ஏளனம் மற்றும் ஏமாற்றப்படுதல் ஆகியவற்றிற்கு ஆட்படுத்துகிறது. இளம் வயதில் கருத்தரிப்பதால் மற்றும் அது தொடர்பான நிகழ்வுகளில் பல்வேறு சுகாதார சிக்கல்கள், பெண் குழந்தைகளுக்கு மரணம் வரை ஏற்படுத்துவதால் குழந்தை திருமணம் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளை அதிக அளவில் பாதிக்கிறது.

சமூகத்தில் நடைபெற்று வரும் குழந்தைத் திருமணங்களை ஒழிப்பதற்காக, மத்திய அரசால் **1929**–ல் இயற்றப்பட்ட குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக குழந்தைத் திருமண தடைச்சட்டம் **2006**–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும், அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள் மற்றும் ஏற்பாடு செய்பவர்கள் மீது அதிகபட்ச தண்டனையை அளிப்பதற்கும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சட்டத்தை செயல்படுத்துதல்**

குழந்தை திருமண தடைச் சட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில விதிகள்

ஏற்படுத்தப்பட்டு **30.12.2009** அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூகநல அலுவலர்கள், குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும் புகாரினை ஏற்று நடவடிக்கை எடுக்க குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தை திருமணங்களை தடுக்கவும், அது குறித்து தகவல் தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர்கள் தலைமையில், ஊராட்சி அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குழந்தை திருமணத்தை தடுப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்:-

1. பொம்மலாட்டம், தெருக்கூத்து, ஊர்வலம் மற்றும் கருத்தரங்கம் போன்ற பல்வேறு முறைகளில் குழந்தைத் திருமணம் தொடர்பான விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுகிறது

2. குழந்தைத் திருமணம் என்னும் கொடுமையிலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்காக, குழந்தைத் திருமணம் தொடர்பான விளம்பரப்படம் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. மத்திய அரசால் இவ்விளம்பரப்படம் தொலைக்காட்சியில் ஆங்கில துணைத் தலைப்புடன் ஒளிப்பரப்பு செய்யப்பட்டது.

3. பெண் குழந்தைகளின் கல்வியை மையமாக கொண்டு தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. குழந்தைத் திருமணத்தை அடியோடு ஒழித்திடும் நோக்கத்தில் திருமண நிதியுதவித் திட்டங்கள் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

4. 13 மாவட்டங்களில் யுனிசெப் (UNICEF) நிதி உதவியுடன் குழந்தைத் திருமணத்தை எதிர்த்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.

5. குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் மற்றும் விதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சட்டமும் விதிகளும் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன. 2008–ஆம் ஆண்டில் இருந்து தமிழகத்தில் 7,090 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

## 2.2 மகளிர் நலம்

மகளிர் நலம் என்பது தமிழக அரசின் வளர்ச்சி திட்டங்களின் இதயமாக திகழ்கிறது. பெண் குழந்தைகள், மகளிர் மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களின் மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும், நீட்டித்த வளர்ச்சிக்கான இலக்குகளை (Sustainable Development Goals) எட்டும் வகையிலும், தமிழ்நாடு அரசின் மகளிர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதரவற்ற பெண்கள், விதவைகள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் மூன்றாம் பாலினர் ஆகியோரை மேம்படுத்தவும், சமநிலை அடையவும் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய இலக்குகளைக் குறிக்கோளாகக் கொண்டு பல சிறப்புத் திட்டங்களை சமூகநலத் துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலம் உணவு, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் கல்வி உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் வழங்கப்படுகின்றன. பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் பல்வேறு நிலைகளில் உள்ள பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வாழ்வாதார

மேம்பாட்டுத் திட்டங்கள், இலவச சட்ட உதவி, மனநல ஆலோசனை மற்றும் சிறப்பு சேவைகள் வழங்கப்படுகின்றன.

### 2.2.1 திருமண நிதி உதவித் திட்டங்கள்

திருமண நிதியுதவித் திட்டம் என்பது பெண்களின் திருமணத்திற்காக பெண்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு திருமண நிதியுதவி அளிக்கும் வகையிலும், பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையிலும் செயல்படுத்தப்படும் தலையாயத் திட்டமாகும். இத்திட்டம் தமிழகத்தில் பெண்களின் கல்வி நிலையை உயர்த்துவதிலும் மற்றும் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தும் பெண்களின் விகிதத்தை குறைப்பதிலும் ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தி உள்ளது.

ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் நிதியுதவியும் 17.05.2011 முதல் 22.05.2016 வரை வழங்கப்பட்டு வந்தது. 23.05.2016 முதல் ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்தின் எடையை உயர்த்தி , 8 கிராம் (22

காரட்) தங்க நாணயமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் ஏழைப் பெற்றோரின் மகள், ஆதரவற்ற பெண்கள், மறுமணம் செய்து கொள்ளும் விதவையர், விதவையரின் மகள், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதியர் ஆகியோர் பயன்பெற்று வருகின்றனர்.

2011–12–ல் 28% ஆக இருந்த பட்டதாரி பயனாளிகளின் எண்ணிக்கை 2017–2018–ஆம் ஆண்டில் 62% ஆக அதிகரித்துள்ளது. 2011–12 முதல் 2017–2018 வரை ஐந்து வகையான திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ் 10,25,838 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

### 2.2.1.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்

18 வயது பூர்த்தி அடைந்து 10–ஆம் வகுப்பு படித்து முடித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு இத்திட்டத்தின் மூலம் திருமண நிதியுதவி அளிக்கப்படுகிறது. சிறப்பினமாக, இத்திட்டத்தில் பயன்பெறும் பழங்குடி இன பெண்கள் குறைந்த பட்சம் 5 ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியும் வழங்குவதுடன் திருமாங்கல்யம் செய்வதற்காக 23.05.2016

முதல் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் இறந்து விட்ட நிலையில் மகளுக்கு நேரடியாக இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் அடைவதற்கு குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹66,455.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.1.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்

இளம் விதவைகளுக்கு சமூகத்தில் கௌரவம், மரியாதை, சமூக ஏற்பு ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு தமிழக அரசால் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பட்டதாரியல்லாதோருக்கு ₹25,000 நிதியுதவியில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதியுதவியில் ₹30,000 மின்னணு

பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்குவதுடன் **23.05.2016** முதல் **8** கிராம் **(22** காரட்) தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு வருமான வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹22.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.1.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் விதவையர் தம் மகளுக்கு திருமணம் செய்ய உதவிடும் வகையில் பட்டதாரியல்லாதோருக்கு **₹25,000**மும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு **₹50,000**மும், அத்துடன் **23.05.2016** முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு **8** கிராம் **(22** காரட்) தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் **₹72,000**க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹3,523.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.1.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்**

ஆதரவற்ற ஏழை பெண்கள் தங்கள் திருமணத்திற்காக இத்திட்டத்தின் மூலம் பயன் பெற தகுதியுடையவராவர். பட்டதாரியல்லாத பெண்களுக்கு ₹25,000மும், பட்டப் படிப்பு / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000மும், திருமண நிதியுதவியாக வழங்கப்படுவதுடன் 23.05.2016 முதல் திருமாங்கல்யம் செய்வதற்கு 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு வருமான வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹424.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.1.5 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

சாதி அடிப்படையிலான வேறுபாடுகளைக் களையவும் சமுதாயத்தினரிடையே சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கும் பொருட்டு அரசால் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கலப்புத் திருமணம் செய்யும் தம்பதியரில் பட்டதாரியல்லாதோருக்கு வழங்கப்படும் ₹25,000 நிதி உதவித்தொகையில் ₹15,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹10,000 தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டம் / பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ₹50,000 நிதி உதவித் தொகையில், ரூ.30,000 மின்னணு பரிமாற்ற சேவை வாயிலாகவும், ₹20,000 தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்குவதுடன் 23.05.2016 முதல் 8 கிராம் (22 காரட் ) தங்க நாணயமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன் பெற கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு எதுவும் தேவையில்லை.

**கலப்புத் திருமணத்தின் வகைகள்**

**திட்டம் – I**

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர்

இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**திட்டம் – II**

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட அல்லது இதர வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1,973.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.2 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு உதவிடும் வகையில் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய ஆண்டு வருமானம் ₹72,000ஆக இருக்க வேண்டும்.

**2017–2018** ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் **3,312** பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹135.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.3 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாடு அரசு பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களை கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் பெண்களுக்கு சுய அதிகாரம் அளிப்பது, அவர்களது பொருளாதார நிலையை உயர்த்துவது மட்டுமல்லாமல், பெண்களைச் சுதந்திரமாகவும் தங்களது திறன்களைக் கொண்டு சுயசார்புள்ளவர்களாகவும் வளர்ச்சி பாதையில் செல்ல வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்ற **98** மகளிர் தையல் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் செயற்பதிவாளர்/சமூக நல ஆணையர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

**25** இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு சங்கங்களில் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள். | 83 | 74,790 | சத்துணவு திட்டம் மற்றும் ஏனைய நலத் துறைகளின் கீழ் பயனடையும் மாணவ / மாணவியர்களுக்கு 4 இணை சீருடைகள் தைக்கும் பணி. |
| 2 | எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள். | 15 | 1,017 | எழுதுபொருள் தயாரிப்பு மற்றும் சத்துணவு திட்டம் மற்றும் ஏனைய நலத்துறைகளின் கீழ் பயனடையும் மாணவ / மாணவியர்களுக்கு 4 இணை சீருடைகள் தைக்கும் பணி. |
| 3 | இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,450 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயனடையும் குழந்தைகளுக்கு இணை உணவு தயாரித்தல் |
| | **மொத்தம்** | **123** | **77,257** | |

இத்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமுதாயத்தில் உள்ள ஏழைப் பெண்களுக்காக பிரத்யேகமாக செயல்பட்டு வருகின்றன. 18 வயதுக்கு மேற்பட்ட வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள பெண்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட தையல் தெரிந்த பெண்கள் இச்சங்கங்களில் உறுப்பினராக தகுதியுடையவர் ஆவர். இந்த உறுப்பினர்களுக்கு சீருடை தைக்கும் வேலைவாய்ப்பினை வழங்குவதன் மூலம் ஆண்டு முழுவதும் அவர்கள் வருமானம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கத் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இத்தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையத்தின் வழிக்காட்டுதலின்படி, தேர்தல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தேர்தல் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**2012–2013** ஆம் ஆண்டு முதல் சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு 4 இணை சீருடைகள் வழங்க கல்வித் துறை ஆணை பிறப்பித்துள்ளது. ஒவ்வொரு வருடமும் சீருடைகள் தைப்பதற்கென தையல் கூலியாக சுமார்

₹90.00 கோடி பள்ளி கல்வித் துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 15,500 நவீன ரக தையல் இயந்திரங்கள் 10% அரசு மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளது. பத்து மாவட்டங்களில் உள்ள மகளிர் தையற் தொழிற்கூட்டுறவு சங்கங்களுக்கு ஜெனரேட்டர், காஜாபட்டன் தைக்கும் இயந்திரம் ஆகியவை ₹48.60 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மகளிர் தையல் தொழிற்கூட்டுறவு சங்கங்களின் சீருடை தைக்கும் தரம் மற்றும் உற்பத்தி திறன் அதிகரித்துள்ளது.

கூட்டுறவு சங்க பெண் உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் சிறந்த மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு கூட்டுறவு துறையினால் ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2017–2018ஆம் ஆண்டு சேலம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இரு மாவட்ட மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மாநில அளவில் சிறந்த சங்கங்களாக தேர்வு

செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். மாநில விருதுகள் மட்டும் அல்லாமல் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.

இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் ஏழைப் பெண் உறுப்பினர்கள் சமூக பொருளாதார முன்னேற்றத்தினை அடைந்து வருகின்றனர்.

## 2.2.4 அரசு சேவை இல்லங்கள்

சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசால் அரசு சேவை இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சேவை இல்லங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. பெண் குழந்தைகள் 12ம் வகுப்பு வரையிலும், ஆண் குழந்தைகள் 5 ஆம் வகுப்பு வரையிலும்

சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம். பல்வேறு சூழ்நிலைகளில் பள்ளிப்படிப்பை இடை நிறுத்தம் செய்த பெண்கள் இவ்வில்லங்களில் குழந்தைகளுடன் தங்கி தங்கள் பள்ளிப் படிப்பையும் தொடரலாம்.

உள்ளுறைவோர்களது திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு தொழிற்கல்வி வழங்கப்படுகிறது. மேலும், ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி, கணினி பயிற்சி, கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் இவ்வில்லங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசு சேவை இல்லங்களில் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. தற்பொழுது, இவ்வில்லங்களில் **475** உள்ளுறைவோர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ஊக்கப்படுத்துவதோடு, தொழிற்சார் கல்வி பயின்றிட

₹50,000மும் மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட ₹30,000மும் நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் அரசு சேவை இல்லத்தில் தங்கி பயனடையும் உள்ளுறைவோர்களுக்கு ₹612.80 இலட்சமும் மற்றும் பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ₹32.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.5 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

பணிபுரியும் பெண்கள் பணி நிமித்தமாக தங்கள் வீட்டை விட்டு வெளியே தங்க வேண்டிய நிலையில் குறைந்த வாடகையில் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியமாகிறது. எனவே, தமிழகத்தில் 18 மாவட்டங்களில், 28 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன. சென்னையில் மாதம் ₹25,000 வரை மாத வருமானம் பெறும் பணிபுரியும் மகளிரும், பிற இடங்களில் ₹15,000 வரை மாத வருமானம் பெறும் மகளிரும் இவ்விடுதிகளில் தங்கி பயன்பெற தகுதியுடையவராவர். சென்னையில் உள்ள விடுதிகளில் தங்கிட ₹300–ம் பிற இடங்களில் உள்ள விடுதிகளில் தங்கிட ₹200–ம் மாத

வாடகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவுக் கட்டணம், மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற செலவினங்கள் பகிர்ந்தளித்தல் முறையில் (Dividing System) மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

**2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹131.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6 ஸ்வதார் இல்லங்கள்

பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு தேவையான நிறுவன கட்டமைப்பு வசதிகளை வழங்க ஸ்வதார் கிரஹ் (Swadhar Greh) திட்டம் வழிவகை செய்கிறது.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பின்வரும் சேவைகள் அளிப்பதன் மூலம் அவர்களின் சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது:-

அ) உணவு, உடை, மருத்துவ வசதிகளுடன் கூடிய தற்காலிக வசிப்பிடம்

ஆ) பொருளாதார நிலையை புனரமைக்கும் வகையில் தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

இ) உளவியல் ஆலோசனைகள்

ஈ) பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

உ) சட்ட உதவி மற்றும் வழிகாட்டுதல்

இவ்வில்லங்களில் அனைத்து தரப்பிலான பெண்களும் அதிகபட்சமாக 3 வருடம் வரை தங்கலாம். 55 வயதிற்கு மேலுள்ள பெண்கள் 60 வயது வரை இவ்வில்லங்களில் தங்க வைக்கப்பட்டு, 60 வயதிற்கு மேல் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவர்.

இவ்வில்லங்களில் தங்கும் பெண்களுக்கு அளிக்கப்படும் அனைத்து வசதிகளும் அவர்களுடன் தங்கும் குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது. ஸ்வதார் கிரஹ் இல்லங்களில் 18 வயது வரையுள்ள பெண் குழந்தைகளும், 12 வயது வரையுள்ள ஆண் குழந்தைகளும் அவர்களது தாயுடன் வசிக்க அனுமதிக்கப்படுகின்றனர். (12 வயதுக்கு மேலுள்ள ஆண் குழந்தைகள் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லங்களுக்கு மாற்றப்படுவர்)

தமிழ்நாடு சமூக நல வாரியம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வந்த 26 குறுகிய கால தங்கும் இல்லங்களும், 12 ஸ்வதார் இல்லங்களும் ஸ்வதார் கிரஹ் இல்லங்களாக இணைக்கப்பட்டு 01.04.2017 முதல் சமூக நல ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

**இத்திட்டத்திற்கென 2018-2019ஆம் நிதியாண்டில் ₹ 577.48 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.7 மாநில பெண்கள் வள மையம் (SRCW)**

தமிழ்நாட்டில் மாநில பெண்கள் வள மையம் (State Resource Centre for Women) 2014ம் ஆண்டு மத்திய அரசின் பெண்கள் மேம்பாட்டிற்கான தேசிய குழுமம் மூலம் துவங்கப்பட்டது. இம்மையமானது மத்திய மற்றும் மாநில அரசின் பெண்களுக்கான முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து கண்காணிப்பு மற்றும் ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் 60 : 40 என்ற விகிதாச்சாரத்திலான நிதியுதவியுடன் மத்திய, மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து தரப்பு பெண்களும் முழுமையான மேம்பாடு அடைய பணிபுரிவது தமிழ்நாடு மாநில பெண்கள் வள மையத்தின் தலையாய நோக்கமாகும். இம்மையமானது, பெண்களின் மேம்பாடு சார்ந்த பிரச்சினைகளுக்காக செயல்படும் அரசையும் மற்றும் இதர தரப்பினரையும் ஒருங்கிணைத்து, பாலின புரிதல் கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சட்டங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த உதவுகிறது.

மாநில பெண்கள் வள மையம் பல்வேறு துறைகளின் பெண்களுக்கான நலத் திட்டங்களை ஒன்றிணைத்து செயல்படுத்துவதற்கான சிறப்பு பணியாளர்களை கொண்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் தொடரும் செலவினத்திற்காக மத்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட ₹38.00 இலட்சத்தை கொண்டு, திறன் வளர்ப்பு பயிலரங்கம், தகவல் கல்வி தொடர்பு (IEC) திட்டங்கள், பெண்களுக்கான சட்டங்கள் குறித்த பயிற்சி, பாலின சமத்துவம், குடும்ப வன்முறை மற்றும் அரசின் தலையாய திட்டங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கீழ்க்காணும் திட்டங்கள் மாநில பெண்கள் வள மையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.2.7.1 மகிளா சக்தி கேந்திரா (MSK)

மகிளா சக்தி கேந்திரா என்ற திட்டத்தின் மூலம் கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்காக திறன் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, டிஜிட்டல் எழுத்தறிவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சேவைகள் ஓரிடத்தில் ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது. கிராமப்புற பெண்கள் அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் தங்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகளை பெற்று பொருளாதார மேம்பாடு அடைய இத்திட்டம் வழிவகை செய்கிறது. இப்புதிய திட்டமானது பல்வேறு நிலைகளில் செயல்படும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

**மகிளா சக்தி கேந்திரா செயலாக்க அமைப்பு**

மாநில அமைப்பு (மாநில பெண்கள் வள மையம்) பெண்களுக்கான பிரச்சினைகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளுக்கு அளிக்க உதவுகிறது. மாவட்ட அளவிலான மையங்கள், வட்டார அளவில் செயல்பட உள்ள மகிளா சக்தி கேந்திரா அமைப்புகளுக்கு உதவுதல் மற்றும் பெண் குழந்தைகளை

பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் உள்ளிட்ட பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை 13 மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுத்திட உதவுகிறது. சேலம் மாவட்டம் மற்றும் அதன் ஒன்றியங்களில் நடைமுறைபடுத்தப்பட்டு வந்த பூரண சக்தி கேந்திரா என்ற திட்டம் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மகிளா சக்தி கேந்திராவுடன் இணைக்கப்பட்டு இதன் செயல்பாடு 2018–2019 முதல் 13 மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது (கடலூர், சேலம், அரியலூர், தருமபுரி, நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, சென்னை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம்). பெண்கள் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மற்றும் சேவைகளை நடைமுறைபடுத்த, கண்காணிக்க, அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த தகவல்களை ஒருங்கிணைக்க, ஆய்வு செய்ய மாவட்ட அளவிலான மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இது கிராம, வட்டார அமைப்புகளுக்கும், மாநில அளவிலான மையங்களுக்கும் ஒரு இணைப்பாக செயல்படுவதை நோக்கமாக கொண்டது.

வட்டார அளவிலான மகிளா சக்தி கேந்திரா மூலம், கிராமப்புற பெண்களின் அதிகார பகிர்வு மேம்பாட்டில் சமுதாய

பங்கேற்பினை ஊக்குவிக்கும் விதமாக மாணவர் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இவர்கள் அரசு நலத்திட்டங்கள் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சியினை பெண்களுக்கு அளிப்பதில் முக்கிய பங்காற்றுவார்கள். 2018–2019 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்த பின்தங்கிய விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா 8 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

| மகிளா சக்தி கேந்திரா (MSK) 2018–2019 | |
|---|---|
| தேசிய அளவில்<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் | பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம், ஒன் ஸ்டாப் சென்டர், பெண்கள் உதவி மையம், மகிளா காவல் தன்னார்வலர்கள், ஸ்வதார், உஜ்ஜவாலா இதர பிற திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் |
| மாநில அளவில்<br>மாநில பெண்கள் வள மையம் (SRCW), சமூக நலத் துறை | |
| மாவட்ட அளவில் (13 மாவட்டங்கள்)<br>மாவட்ட பெண்கள் வள மையம் (DLCW) | |
| வட்டார அளவில் (இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 8 வட்டாரங்கள் வீதம்)<br>வட்டார அளவிலான குழு – மாணவ தன்னார்வலர்கள் | |

## மகிளா சக்தி கேந்திரா (MSK) கண்காணிப்பு அமைப்பு

மாநில அளவில் அரசு முதன்மைச் செயலரின் தலைமையிலும், மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர்

தலைமையிலும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டு திட்ட செயல்பாடு கண்காணிக்கப்படும்.

வட்டார அளவிலான பணிகளுக்கு வட்டார அளவில் குழு அமைக்கப்பட்டு மாணவ தன்னார்வலர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் அவர்களின் பணி கண்காணிக்கப்படும். மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே 60:40 என்ற விகிதாச்சாரத்தில் மகிளா சக்தி கேந்திரா செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை 2018–2019 ஆம் நிதியாண்டில் செயல்படுத்துவதற்காக மத்திய மாநில அரசுகள் ₹7.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.

### 2.2.7.2 ஒன் ஸ்டாப் சென்டர் (One Stop Centre)

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சிறப்பு திட்டமான ‘சகி’ என்ற ஒன் ஸ்டாப் சென்டர் தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் திட்டமாகும். உடல்ரீதியாக, பாலியல்ரீதியாக, உணர்வுரீதியாக, மனரீதியாக, பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வயது, ஜாதி, மதம், கல்வித் தகுதி, திருமண நிலை, கலாச்சாரம், இனம் போன்ற எந்த பாகுபாடுமின்றி உதவியும், நிவாரணமும் அளிக்கும் திட்டமாகும்.

இத்திட்டம் முதற்கட்டமாக ஜனவரி **2017** முதல் சென்னையில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவையும், ஒருங்கிணைந்த உதவியையும் ஒரு குடையின் கீழ் உடனடியாக வழங்கி வருவதுடன், அவசரம் மற்றும் அவசரம் அல்லாத உதவிகளான மருத்துவம், சட்ட உதவி, மனநல மேம்பாடு மற்றும் ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளையும் வழங்கி வருகிறது.

இம்மையத்திற்கு தாமாகவோ அல்லது பல்வேறு தரப்பின் பரிந்துரையின் பேரிலோ வரும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் குழுவினரால் தற்காலிக தங்கும் வசதி, உளவியல்ரீதியான ஆலோசனைகள், இலவச சட்ட உதவி, காவல் துறையின் உதவி மற்றும் துயருறும் பெண்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்றவை வழங்கப்படுகின்றன. **2017–2018** ஆம் ஆண்டில் தொடர் மற்றும் தொடரா செலவினம் மற்றும் கட்டுமான பணிக்காக **₹60.88** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுநாள்வரை **79** அவசரம் மற்றும் அவசரமல்லாத வழக்குகள் பதிவாகியுள்ளன.

**2018–2019** ஆம் ஆண்டிற்கு, ஒரு மையத்திற்கு **₹43.14** இலட்சம் வீதம் சேலம், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் திருச்சி

மாவட்டங்களுக்கு 4 புதிய ஒன் ஸ்டாப் சென்டர் துவங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 27 மாவட்டங்களிலும் புதியதாக ஒன் ஸ்டாப் சென்டர் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.2.7.3 பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி (Women Help Line)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு (காவல்துறை, ஒன் ஸ்டாப் சென்டர் மற்றும் மருத்துவமனை போன்ற உரிய அதிகார மையங்களுடன் தொடர்பு கொள்ளுதல்) 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்பதே உலகளாவிய பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி திட்டத்தின் நோக்கமாகும். பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களையும் அளித்து வருகிறது. நாடு முழுவதும் ஒரே சீரான குறுகிய குறியீட்டின் மூலம் இதனைச் செயல்படுத்த ₹62.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.7.4 சமுதாய உதவி மையம்

பொதுமக்கள், பயனாளிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனையோருக்கு, அவர்களுக்கு தேவையான தகவல்களை

ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) பெறுவதற்கு மாவட்ட அளவில் சமுதாய உதவி மையம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. மக்களின் குறை தீர்க்கும் வழிகாட்டு முறைகளை எடுத்துரைக்கும் திறன் பெற்ற ஊழியர்களை தன்னகத்தே கொண்ட இம்மையம் ₹1.94 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு பல சமூக சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட, பன்முகப் பரிமாண தொடர்பு கல்வி சாதனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இம்மையம் பல அரசு திட்ட செயல்பாடுகளைக் கண்காணிப்பதுடன், சமுதாயத்திற்கு தகவல்களைக் கொண்டு செல்ல உதவுகிறது. அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த விளம்பர பலகைகள் இம்மையத்தில் தகவல் தொடர்புக்காக வைக்கப்பட்டுள்ளன. சமூக சட்டங்கள் குறித்த தகவல்கள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் சுவரொட்டிகள் உருவாக்கப்பட்டு மாநில பேருந்துகள் மற்றும் மெட்ரோ ரயில்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. துறையின் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த கையேடு உருவாக்கப்பட்டு அனைத்து களப்பணியாளர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன.

### 2.2.8 பெண்களுக்கான நலச் சட்டங்கள்

இத்துறை பெண்கள் தங்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும் உரிமையை பாதுகாத்து கொள்வதற்கும் கீழ்க்காணும் சமூக நலச் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது:–

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் அதன் விதிகள் 2006
3. பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013
4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015

#### 2.2.8.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

இச்சட்டம் சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய சட்டமாகும்.

இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது. இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் உள்ளடக்கி இருந்தாலும், பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த 60 நாட்களுக்குள் தீர்வுபெற முடியும்.

இச்சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த அதே வீட்டில் வசித்து வரும் ஆண்கள் மீதும் வழக்கு தொடரவும், நிவாரணம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- ❖ பாதிக்கப்பட்ட நபர்களுக்கிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருந்த போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005ன் கீழ் வழக்குகளை பதிவு செய்யலாம்.
- ❖ ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது
- ❖ வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளையும் குற்றச்செயலாக அங்கீகரித்தல்.
- ❖ குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து 30 நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ் கிடைக்கும் நிவாரணங்கள் பின்வருமாறு:—

பிரிவு 18 – எதிர் மனுதாரர் குடும்ப வன்முறை புரிவதிலிருந்து தடுத்திடும் பாதுகாப்பு ஆணை.

பிரிவு 19 – கணவர் வீட்டில் தங்குவதற்கான வசிப்பிட ஆணை

பிரிவு 20 – பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர் தம் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொருள் உதவி ஆணை

பிரிவு 21 – குழந்தைகளைத் தற்காலிகமாக தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான ஆணை.

பிரிவு 22 – உணர்வுப் பூர்வமான துன்பங்கள், மன உளைச்சல் மற்றும் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணை

**பாதுகாப்பு அலுவலர்கள்**

❖ பாதிக்கப்பட்ட பெண்கள் உரிய நீதிமன்றத்தை நாடி நிவாரணம் பெறுவதற்கான சட்ட உதவிகளை வழங்கவும், இந்த வழக்கில் குடும்ப வன்முறை அறிக்கை தாக்கல் செய்யவும், ஒவ்வொரு மாவட்ட சமூக நல அலுவலகத்திலும் பாதுகாப்பு அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். நீதிமன்றத்தினால் வழங்கப்படும் ஆணைகளை காவல்துறையின் உதவியோடு செயல்படுத்துவதற்கும் இவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

- ❖ பாதிக்கப்பட்ட பெண்கள் இச்சட்டத்தின் கீழ் நேரடியாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலோ அல்லது சேவை அளிக்கும் நிறுவனத்திலோ அல்லது அருகிலுள்ள காவல் துறையிலோ புகார் மனு அளிக்கலாம்.

- ❖ குடும்ப வன்முறை சட்டம், **2005**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்( மார்ச் **2018** வரை)

| | | |
|---|---|---|
| **1** | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | **39118** |
| **2** | நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | **14385** |
| **3** | இலவச சட்ட உதவிக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | **1444** |
| **4** | மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்ட வழக்குகள் | **595** |
| **5** | நீதிமன்ற ஆணையின்படி பிரிவு எண்.**14**ன் கீழ் ஆற்றுப்படுத்துவதற்கு அனுப்பப்பட்ட வழக்குகள் | **1226** |
| **6** | பாதுகாப்பு அலுவலரால் முடிக்கப்பட்ட வழக்குகள் | **21838** |

**சேவை அளிப்பவர்கள்**

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், **2005**–ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த நபர்கள் சேவை அளிப்பவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இச்சட்டத்துடன் தொடர்புடைய அரசு அலுவலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும் பெற்றுத்தர உதவி செய்கின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு குடும்ப

நிகழ்வு அறிக்கை பதிவு செய்வதில் உதவுதல், தங்களது குழந்தைகளுடன் தங்குவதற்கு பாதுகாப்பான குறுகிய கால உறைவிடம் பெற்றுத் தருதல், ஆலோசனை மற்றும் மருத்துவ வசதி வழங்குதல் போன்ற உதவிகளை செய்கின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் சுயமாக வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக தொழிற்பயிற்சி பெறவும் உதவி செய்கின்றனர். ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் என்ற விகிதத்திலும் சென்னை மாவட்டத்திற்கு இரு சேவை அளிப்பவர்கள் என்று மொத்தம் 33 சேவை அளிப்பவர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 2.2.8.2 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

- வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்டதுடன் தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான ஆலோசனை குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இச்சட்டமானது 1989ல் திருத்தம் செய்யப்பட்டு, வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ன் படி மாவட்ட சமூக நல அலுவலர்களை வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இச்சட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்த அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- ❖ வரதட்சணை தொடர்பாக மாவட்ட சமூக நல அலுவலர்களால் நேரடியாக பெறப்படும் புகார் மனுக்கள் மற்றும் காவல் துறையின் மூலம் பெறப்படும் புகார் மனுக்கள் ஆகியவை வரதட்சணை தடுப்பு அலுவலர்களால் விசாரிக்கப்படுகின்றன.
- ❖ மாவட்ட சமூக நல அலுவலர்களால் புகாரின் உண்மைத் தன்மை கண்டறியப்பட்டு, அதன்அடிப்படையில் வரதட்சணை தடுப்புச் சட்டம்,1961ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு காவல்துறைக்கு / நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது.
- ❖ ஆண்டுதோறும் நவம்பர் 26–ஆம் நாள் வரதட்சனை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றைய தினம், மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

**வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (மார்ச் 2018 வரை)**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட சமூக நல அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 7849 |
| 2 | ஆற்றுப்படுத்துதல் மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள் | 6212 |
| 3 | மாவட்ட சமூக நல அலுவலரால் காவல் துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | 1087 |
| 4 | மாவட்ட சமூக நல அலுவலரின் விசாரணையில் உள்ள வழக்குகள் | 550 |

### 2.2.8.3 பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013

2013ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு, பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013ஐ செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் பிரிவு 5 மாவட்ட ஆட்சியரை மாவட்ட அலுவலராக அறிவித்துள்ளது.

இச்சட்டத்தின் பிரிவு 2–ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, 10 பணியாளர்களுக்கு மேலுள்ள அலுவலகங்களில் உள்ளக புகார் குழு (Internal Complaints Commitee) அமைக்கப்படுவதை, மாவட்ட சமூக நல அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர்களால் அந்தந்த மாவட்டங்களில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் (அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள்) உள்ளக புகார் குழு (ICC) அமைப்பது குறித்து நாளிதழ்களில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஒரு அலுவலகத்தில் 10–க்கும் குறைவான பணியாளர்கள் இருக்கும் பட்சத்தில், பணியமர்த்துபவர் (Employer) மீது புகார் இருப்பின், மாவட்ட அளவிலான குழுவிடம் புகார் அளிக்கப்பட வேண்டும்.

மாவட்டத்தின் பல்வேறு நிலைகளில் (மாவட்டம் / வட்டம் / வட்டாரம்) ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான துன்புறுத்தல் குறித்து இணையதளம் மூலம் புகார் பதிவு செய்ய, SHE-Box (Sexual Harassment Electronic Box) என்ற ஒரு புதிய திட்டத்தை அரசு நிறுவியுள்ளது. சமூக நல ஆணையர் அவர்கள் இத்திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பாளராக (State Nodal Officer) அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்ட அளவில் இத்திட்டத்தின் கீழ் வரும் புகார்களை விசாரிக்க மாவட்ட சமூக நல அலுவலர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக (District Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின் பிரிவு **24**–ன்படி, அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் இச்சட்டத்தை பற்றிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 2.2.8.4 தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்கு முறைப்படுத்தும்) சட்டம், 2014

வீட்டை விட்டு வெளியில் தங்கியுள்ள குழந்தைகள், பெண்கள், பணிபுரியும் மகளிர் ஆகியோர்களின் பாதுகாப்பினை அதிகப்படுத்தவும், அவர்களுக்கு எதிரான வன்முறை செயல்களை தடுக்கவும், குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் பெண்கள் தங்கும் இல்லங்கள், விடுதிகள் மற்றும் ஏனைய பிற தங்கும் இடங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான, தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், **2014** அரசால் இயற்றப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், **2015**, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்வில்லங்கள் மற்றும் விடுதிகளை பதிவு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தேவையின்றி குழந்தைகளை இல்லத்தில் வைத்திருப்பதை குறைப்பதும், விடுதிகளில் தங்கி பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் இச்சட்டத்தின் நோக்கமாகும்.

## 2.3 மூத்த குடிமக்கள் நலன்

இந்திய மக்கள் தொகையில் முதியோர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதுடன் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி முதியோர்களின் எண்ணிக்கை 8.6 சதவீதமாக உள்ளது. தேசிய ஜனத்தொகையில் உள்ள முதியோர்களின் சதவீதத்தை விட தமிழகத்தில் அதிகமாக (10.4சதவிகிதம்) உள்ளதால், இவர்களின் நலனை பாதுகாப்பது மிகப்பெரிய சமுதாய சவாலாக உள்ளது. முதியோர்களின் பொருளாதார மற்றும் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்யவும், அவர்களின் உணர்வுபூர்வமான தேவைகளை நிறைவேற்றவும் தகுந்த சூழ்நிலைகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும்.

மத்திய அரசு இயற்றிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007–ஐ நடைமுறைபடுத்துவதுடன் அவர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

### 2.3.1 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உத்தரவாதமும், அங்கீகாரமும் அளிக்கப்பட்டுள்ளவாறு மூத்த குடிமக்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பை பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 வழங்குகிறது. இச்சட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுவதுடன் மாநில விதிகளும் உருவாக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்:—**

பெற்றோர் அல்லது மூத்த குடிமக்கள் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால் தன்னுடைய பிள்ளைகள் அல்லது சட்டபூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு **5**—ன் கீழ் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் **90** நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.

- பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ரூ.10,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறைத்தண்டனை அல்லது ₹5,000 வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக அளிக்கப்படும்.

### 2.3.2 முதியோருக்கான குறை தீர்வு வழிமுறைகள்

மூத்தகுடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட தீர்ப்பாயம் ஒன்று அரசாணை எண் 172 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந6) துறை நாள் 31.12.2009–ன்படி அமைக்கப்பட்டுள்ளது. முதியோர்களின் குறைகளை விரைந்து தீர்வு செய்வதற்கு இம்மாநிலத்தில் 81 தீர்ப்பாயங்கள் செயல்படுகின்றன. தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2017–2018ஆம் ஆண்டு வரையில் 2,360 விண்ணப்பங்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டு 1,103 வழக்குகளில் சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டும், 302 வழக்குகளில் வருவாய் கோட்டாட்சியர்களால் இறுதியாணை வெளியிடப்பட்டும் உள்ளது.

### 2.3.3 முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக் குழுக்கள்

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007ஐ சிறப்பாக செயல்படுத்தவும், ஆலோசனை வழங்கவும், கண்காணிக்கவும் மாநில அளவில் தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் உள்ளடக்கிய உயர் மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது போன்று, மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு 3 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 4 அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்ட (2 மூத்த

குடிமக்கள் உட்பட) மாவட்ட அளவிலான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### 2.3.4 முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த வளாகங்கள்

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு இடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு புதிய சிறப்பு திட்டமாக ஒருங்கிணைந்த வளாகங்கள் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அரசின் மானியத்துடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும் வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது மாநிலத்தில் செயல்படும் 51 ஒருங்கிணைந்த வளாகங்கள் மூலம் 2,346 பயனாளிகள் (1147 முதியோர்கள் + 1199 குழந்தைகள்) பயனடைந்து வருகின்றனர்.

**இத்திட்டத்திற்கென 2018–2019ஆம் நிதியாண்டில் ₹670.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.5 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

முதியோர்களுக்கான ஒருங்கிணைந்த வளாகங்கள் தவிர, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கென்று தனியே தமிழக அரசு மானிய உதவி அளித்து வருகிறது. முதியோர் இல்லங்களில் தங்கி பயனடையும் முதியோர்களுக்குரிய உணவூட்டு மானியம் அரசாணை (நிலை) எண்.11, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந6(1)) துறை நாள் 23.02.2017–ன்படி, 01.09.2016 முதல் ₹300 லிருந்து ₹1,200ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மாநிலத்தில் செயல்படும் 20 முதியோர் இல்லங்கள் மூலம் 674 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

**இத்திட்டத்திற்கென 2018–2019ஆம் நிதியாண்டில் ₹117.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.6 மத்திய அரசு உதவி பெறும் நலத்திட்டங்கள்– மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC)

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் முதியோர்களுக்கான ஒருங்கிணைந்த திட்டமானது (IPOP)01.04.2018 முதல் ஒருங்கிணைந்த மூத்த குடிமக்களுக்கான திட்டமாக (IPSrC) திருத்தப்பட்டுள்ளது. முதியோர்களுக்கு உணவு, உறைவிடம், மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் ஆக்கபூர்வமான செயல்பாடுகளுடன் முதியோர்களை ஊக்குவிக்க கீழ்க்காணும் திட்டங்கள் வழிவகை செய்கிறது.

i. முதியோர் இல்லங்களை பராமரித்தல்
ii. அல்ஸிமெர்ஸ் மற்றும் ஞாபக மறதியால் பாதிக்கப்பட்ட மூத்த குடிமக்களுக்கான தொடர் கவனிப்பு மற்றும் பராமரிப்பு இல்லங்கள்
iii. நடமாடும் மருத்துவ குழுக்கள்
iv. மூத்த குடிமக்களுக்கான இயன் மருத்துவம் (Physiotherapy)
v. மண்டல அளவிலான பயிற்சி மற்றும் வள மையங்கள்.

இத்திட்டத்தின் கீழ் செயல்படும் **49** முதியோர் இல்லங்களுக்கும் **21** இதர திட்டங்களுக்கும் சேர்த்து **2017–2018**ஆம் ஆண்டில் **₹606.69** இலட்சம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**2.3.7 சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுதல்**

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடம் உள்ள அனுபவம், அறிவு ஆகியவற்றை வெளிக்கொணரவும், ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் அன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவின் போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரிந்த சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும் இவ்விழாவின் ஒரு பகுதியாக, முதியோர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்படுவதோடு, முதியோர்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

**இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம்ஆண்டில் ₹5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.8 முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்

முதியோர்கள் அவர்களது நெருங்கிய உறவுகளால் நிராகரிக்கப்படும் நிலையில் பொது வாழ்விலும், தனிப்பட்ட முறையிலும், பல்வேறு வன்முறைகளை அன்றாடம் சந்திக்கின்றனர். முதியோர்கள் கொடுஞ்செயல்களால் பாதிப்படையாமல் பாதுகாப்பதும் அவர்களது சுயமதிப்பை காக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நமது கடமையாகும். முதியோர்கள் பாதுகாப்பாகவும் மற்றும் கண்ணியமாகவும் வாழ்வதை உறுதி செய்ய ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15–ஆம் நாள் முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு அனைத்து பள்ளி, கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்களிலும் உறுதி மொழி எடுக்கப்படும்.

**இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம்ஆண்டில் ₹4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.9. முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோர்களுக்கு தடுப்பூசி மருந்துகள் அளித்தல்

முதுமை அடையும்போது மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து நோய் தொற்றுக்கு ஆளாகும் அபாயம்

அதிகரிக்கிறது. பலவிதமான நோய்களுடன் ஊட்டச் சத்து குறைவு ஏற்பட்டு அவர்களது வாழும் காலம் குறையும் நிலை ஏற்படுகிறது. எனவே, முதியோர்களையும் குழந்தைகளை போலவே நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க தடுப்பூசி மருந்துகள் அளிப்பது அவசியமாகிறது.

முதியோர்களுக்கு நீண்ட நாள் வியாதிகளான நீரிழிவு நோய், இரத்த கொதிப்பு போன்றவற்றிக்கு மருந்து மாத்திரைகள் வழங்கி வருவார்கள். சிலர் புற்று நோய் மற்றும் இருதய நோய்களால் பாதிக்கப்பட்டு அவற்றிற்கும் மருந்துகள் உட்கொண்டு வருவார்கள்.

நுரையீரல் தொற்றுநோய் பாதிப்புகள் மூலம் முதியோர்களின் மரணத்தை தடுக்கும் வகையில் தடுப்பூசி மருந்துகள் அளிக்கப்படுகிறது. அரசு மானியம் பெறும் முதியோர் இல்லங்களில் தங்கி பயனடையும் முதியோர்களுக்கு நோய் தொற்றுகளிலிருந்து அவர்களை காக்கும் பொருட்டு, சுகாதார துறையினரால் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் PREVNAR 13 என்ற நிமோனியா நோய்க்கு எதிரான தடுப்பூசி மருந்து அளிக்கப்பட உள்ளது. இத்திட்டம்

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த தடுப்பூசிகளுக்கான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சுகாதார துறையின் மூலம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் / அரசு மருத்துவர்கள் / அருகிலுள்ள சுகாதார மையங்கள்/வட்டார அளவிலான தலைமை மருத்துவமனைகள் / மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மூலம் முதியோர்களுக்கு அளிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 4,133 முதியோர்கள் பயனடைய உள்ளனர். இத்திட்டத்திற்கென 2017-2018ஆம் நிதியாண்டில் ₹165.32 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.4 மூன்றாம் பாலினர் நலன்

சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மூன்றாம் பாலினரை, அனைத்து நிலைகளிலும் உயர்த்த இம்மாநில அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மூன்றாம் பாலினரின் பிரச்சனைகளைத் தீர்வு செய்வதற்காகவும், அவர்களின் வாழ்வாதாரத்தை

மேம்படுத்தவும், கல்வி உதவித் தொகை, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அளித்து சமுதாயத்தில் அவர்களுக்கு அங்கீகாரம் ஏற்படுத்தும் பொருட்டு மூன்றாம் பாலினருக்கான நல வாரியம் அரசால் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம் மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு, அவர் உட்பட 11 அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 12 அலுவல்சாரா உறுப்பினர்களைக் (மூன்றாம் பாலினர்) கொண்டது.

இதுவரை 5,200 மூன்றாம் பாலினருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், பயணியர் மற்றும் சரக்கு ஆட்டோ ஓட்டுதல், நாப்கின் தயாரித்தல், பால், துணி, கயிறு, அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு சுய தொழில்களை செய்ய மூன்றாம் பாலினர் குழு மற்றும் தனி நபர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 2017–2018ஆம் ஆண்டு வரை மூன்றாம் பாலினருக்கு சுயதொழில் துவங்க ₹2.05 கோடி மானியம் அரசால் வழங்கப்பட்டு 1,175 பேர் பயனடைந்துள்ளனர்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினருக்கு உதவிடும் வகையில், ₹1,000 மாதாந்திர

ஒய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1,000 மூன்றாம் பாலினர் பயனடைகின்றனர்.

பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வீட்டுமனை பட்டா மற்றும் வீட்டு வசதி போன்ற அத்தியாவசிய தேவைகளை சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் மூன்றாம் பாலினருக்கு பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

**மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2018–2019 ஆம் நிதியாண்டில் ₹220.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.5 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்ட ரீதியான அமைப்பாக (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அரசாணை எண் 88, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட சந(3)–த்துறை, நாள் 22.12.2017–ன்படி

தலைவர் மற்றும் 9 உறுப்பினர்களைக் கொண்ட மகளிர் ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு 26.12.2017 முதல் இயங்கி வருகிறது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விசாரணை செய்து உடனடியாக தீர்வு காண இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. இவை தவிர வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013, ஆகிய சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

கடந்த 2017 ஆம் ஆண்டு 1,180 பாதிக்கப்பட்ட மகளிரிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் தேசிய மகளிர் ஆணையம் துவங்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு, நடைபயணம், பேரணி போன்ற பல்வேறு விழிப்புணர்வு

நிகழ்ச்சிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளுக்காக தேசிய மகளிர் ஆணையத்திலிருந்து ₹2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது.

மேலும், மாவட்டந்தோறும் சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்காக ₹12.00 இலட்சம் தேசிய மகளிர் ஆணையத்திலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது.

**இவ்வாணையத்தின் செலவினத்திற்காக 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு ₹31.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.6 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் 1954 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக பின்வரும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது:—

1. பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

2. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் சேவைகளின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்

3. மாநில மற்றும் மத்திய சமூகநல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணித்தல்

தமிழ்நாடு சமூக நல வாரியம் ஒரு தலைவரையும், 15 அலுவல் மற்றும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. தமிழ்நாடு சமூக நல வாரியம் பெண்களுக்கு கல்வி, பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல் ஆகிய சேவைகளை அளிப்பதற்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவி வருகிறது.

### 2.6.1 தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியம்

தமிழக அரசு, சங்கப் பதிவு சட்டத்தின் கீழ் அல்லது பொது அறக்கட்டளை சட்டத்தின் கீழ் பதிவு செய்து, குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் நிறைவு பெற்று சமூக சேவை ஆற்றிவரும் 200 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவிபுரிய ஆண்டுதோறும் தமிழ்நாடு சமூகநல வாரியத்திற்கு

₹10.00 இலட்சம் நிதியுதவி மானியமாக வழங்குகிறது. இந்த மானியம் மகளிர் மற்றும் குழந்தைகள் முன்னேற்ற பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் மட்டும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ₹5,000 மானியம், 50:50 என்ற வீதத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்திற்கென 2018–2019ஆம் நிதியாண்டிற்கு ₹10.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.6.2 குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசு மானியம்)**

தமிழக அரசு, சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவங்களின் மூலமாக செயல்படும் 6 குடும்ப ஆலோசனை மையங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. சமுதாயத்தில் குடும்பம் என்னும் அடிப்படை அலகினை காப்பதற்கு ஆலோசனை வழங்குவதே குடும்ப ஆலோசனை மையத்தின் நோக்கமாகும். இம்மையம் வரதட்சணை கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கத்தால் ஏற்படும் குடும்ப பிரச்சனைகள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கான

ஆலோசனை போன்றவற்றிற்கு தீர்வுகாண இம்மையத்திற்கு வரும் பெண்களுக்கு தகுந்த ஆலோசனை வழங்கிட உதவி புரிகிறது.

குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள், குடிப்பழக்கம், போதை பழக்கம் மற்றும் வரதட்சனை கொடுமை போன்றவற்றால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தீர்வு காணும் வகையில் தமிழக அரசு சென்னையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் நியமிக்கப்பட்டுள்ள குடும்ப ஆலோசகர்களுக்கு மத்திய அரசின் மதிப்பூதியம் ₹10,000 உடன் கூடுதல் மதிப்பூதியமாக மாதம் ₹3,500 மாநில அரசு வழங்குகிறது.

**2018–2019 ஆம் ஆண்டிற்கு ₹7.14 இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.**

**2.6.3 குடும்ப ஆலோசனை மையம் (மத்திய அரசு மானியம்)**

தமிழ்நாட்டில் 1984 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதியுதவியுடன் 61 குடும்ப ஆலோசனை மையங்கள் மத்திய சமூகநல வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 61 மையங்களில் 2 மையங்கள் சென்னை (புழல்) மற்றும்

வேலூரில் உள்ள மத்திய பெண்கள் சிறைச்சாலையில் செயல்பட்டு வருகின்றன. 3 மையங்கள் முறையே காவல் துறை ஆணையரகம், ஆயிரம் விளக்கு மற்றும் பூக்கடையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குடும்ப ஆலோசனை மையங்களின் வாயிலாக 60,120 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலம் 2017–2018ஆம் ஆண்டில் ₹195.20 இலட்சம் மானியமாக குடும்ப ஆலோசனை மையத்திற்கு வழங்கப்பட்டது.

## 2.7 மாநில விருதுகள்

### 2.7.1 பெண்கள் குழந்தைகளுக்கான மாநில விருது

குழந்தைகளின் திறன்களை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பாராட்டும் வகையிலும் 18 வயதுக்கு கீழுள்ள பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி 24–ம் தேதி மாநில விருதினை வழங்க தமிழக அரசால் முதல் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருதானது, பெண்

குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும், பெண் குழந்தைகள் அனைவருக்கும் கல்வியை உறுதி செய்யும் வகையிலும், குழந்தை பெண் தொழிலாளர் முறையை ஒழிக்கவும், குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்தும் வகையிலும் செயலாற்றிய பெண் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருதானது ₹1.00 இலட்சம் காசோலை, மற்றும் சான்று கொண்டது.

### 2.7.2 அவ்வையார் விருது

மார்ச் 8ஆம் தேதி, பெண்களுக்கான சர்வதேச தினம் உலகம் முழுவதும் பெண்களுக்காக அர்ப்பணிப்புடன் கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வண்ணம், இத்துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவ்வையார் விருது எனும் உயரிய விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவருக்கு 8 கிராம் (22 காரட்) எடையுள்ள தங்கப்பதக்கம்,

₹1.00 இலட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படுகிறது.

### 2.7.3 சுதந்திர தின விருது

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்தன்று, பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகி மற்றும் பெண்களுக்காக சிறப்பாக தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது வழங்கப்படுகிறது. சிறந்த சமூக சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம், சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ₹50,000 ரொக்கப் பரிசுடன் சால்வை மற்றும் தங்கப்பதக்கமும் வழங்கப்படுகின்றன.

********

## அத்தியாயம்–3

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

**3.1** சமூக வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் கல்வி கற்றலுக்கு பசி இடையூறாக இருத்தல் கூடாது என்பதனை மனதில் கொண்டு அப்போதைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1.07.1982 அன்று சத்துணவு திட்டம் துவக்கப்பட்டது. பள்ளிக் குழந்தைகள் கல்வியுடன் ஊட்டச்சத்தையும் பெறவேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்கள், மதரசாக்கள் மற்றும் மக்தப்களில் பயிலும் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கும், தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடான மதிய உணவு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

### 3.2 திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

1. ஆரம்ப பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், இடைநிற்றலை குறைத்திடுதல் மற்றும் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி வழங்கிடுதல்.

2. ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குழந்தைகளுக்கும்


சத்துணவு வழங்குவதன் மூலம் ஊட்டச்சத்து அளித்தல்.

3. ஏழ்மையில் உள்ள பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளை ஊக்கப்படுத்தி தொடர்ந்து பள்ளிக்கு வருகை புரியவைத்தல், முறையான கல்வி அளித்தல்.

4. வேலைவாய்ப்பினை வழங்குவதன் மூலம் பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைய வழி வகுத்தல்.

## 3.3 சத்துணவுத் திட்டத்தின் வளர்ச்சி நிலைகள்

சத்துணவுத் திட்டம், 1.07.1982 அன்று 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயதிற்குட்பட்ட ஆரம்பப்பள்ளி பயிலும் குழந்தைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டது. பின்னர் 15.09.1982 அன்று நகர்ப்புற பகுதிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டதோடு, 15.09.1984 ஆம் ஆண்டு 10 வயது முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடையும் வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.



### 3.4 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

i) 5 முதல் 9 வயதிற்குட்பட்ட துவக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 210 நாட்கள், பள்ளியிலேயே சூடாக சமைத்த ஊட்டச்சத்து நிறைந்த கலவை சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

ii) தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் சூடாக சமைத்த ஊட்டச்சத்து நிறைந்த கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

iii) 1 முதல் 5ஆம் வகுப்பு வரை துவக்கப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு, நாளொன்றுக்கு 100 கிராமும், 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை உயர் துவக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு 150 கிராம் அரிசியும் வழங்கப்படுகிறது.

## 3.5 பயனாளிகள்

சத்துணவு திட்டத்தின் கீழ் மாநிலத்தில் செயல்படும் மையங்கள் மற்றும் பயனாளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | நிலை | மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | துவக்கப்பள்ளி (1 முதல் 5 வரை) | 26,801 | 25,28,269 |
| 2. | உயர் துவக்கப்பள்ளி (6 முதல் 8 வரை) | 16,134 | 20,14,484 |
| | உயர்நிலைப்பள்ளி (9 முதல் 10 வரை) | | 6,47,338 |
| 3. | தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் | 270 | 6,689 |
| | **மொத்தம்** | **43,205** | **51,96,780** |

## 3.6 சத்துணவுத் திட்டத்தின் உட்கூறுகள்

### 3.6.1 கலவை சாதம்

2013 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில், பல்வகை கலவை சாதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, 15.8.2014 முதல் மாநிலத்திலுள்ள அனைத்து சத்துணவு மையங்களிலும் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. சத்துணவு பணியாளர்களுக்கு சுகாதாரமான சமையல் முறைகள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

பல்வகை கலவை சாத உணவு வகைகள் பின்வருமாறு:-

| **நாட்கள்** | **வழங்கப்பட்டு வரும் உணவு வகை** | |
|---|---|---|
| | **முதல் மற்றும் மூன்றாம் வாரம்** | **இரண்டாவது மற்றும் நான்காவது வாரம்** |
| திங்கட் கிழமை | வெஜிடபிள் பிரியாணியுடன் மிளகு முட்டை | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) உடன் வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை | கருப்பு கொண்டைக்கடலை புலவு உடன் தக்காளி மசாலா முட்டை | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதத்துடன் மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் உடன் மிளகு முட்டை | புளி சாதம் உடன் தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை | சாதம், சாம்பாருடன் வேகவைத்த முட்டை | எலுமிச்சை சாதம் , சுண்டலுடன் தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டையுடன் மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு | சாதம் , சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

### 3.6.2 முட்டை வழங்குதல்

அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு சூடாக

சமைத்த ஊட்டச்சத்து நிறைந்த கலவை சாதத்துடன், குறைந்தபட்சம் 46 கிராம் எடையுள்ள ஒரு முட்டை வழங்கப்படுகிறது. அதன் மூலம் 6.12 கிராம் புரதமும் 80 கிலோ கலோரி சக்தியும் கிடைக்கின்றன.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000 ஐ பின்பற்றி மாநில அளவில் அக்மார்க் ‘A’ குறியீடு உடைய நடுத்தர முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. தரமான முட்டைகள் வழங்குதலை கண்காணிக்க, உணவுத் தரம் வாய்ந்த வண்ணங்களைக் கொண்டு முட்டைகளின் மேல் முத்திரை பதிக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.

### 3.6.3 பயறு வகைகள் – கொண்டைக் கடலை / பாசிப் பயறு

மாதத்தின் முதல் மற்றும் மூன்றாவது செவ்வாய் கிழமைகளில் ஒவ்வொரு குழந்தைக்கும், 20 கிராம் ‘கருப்பு கொண்டைக் கடலை’, கொண்டைக் கடலை புலவாக வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 72 கிலோ கலோரி சக்தியும், 3.42 கிராம் புரதமும் கிடைக்கின்றன.

மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது வியாழக் கிழமைகளில் ஒவ்வொரு குழந்தைக்கும், 20 கிராம் 'பச்சைப் பயறு சுண்டல்' வழங்கப்படுவதால் குழந்தைகளுக்கு 67 கிலோ கலோரி சக்தியும், 4.80 கிராம் புரதமும் கிடைக்கின்றன.

### 3.6.4 உருளைக் கிழங்கு

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் குழந்தைகளுக்கு மாவு சத்தின் (கார்போஹைட்ரேட்) அளவினை அதிகரிக்கும் வகையில், 20 கிராம் உருளைக் கிழங்கு மிளகாய்பொடி தூவி வறுத்து வழங்கப்படுவதால் 19.04 கிலோ கலோரி சக்தியும், 0.32 கிராம் புரதமும் கிடைக்கின்றன.

### 3.6.5 வாழைப்பழம்

முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படுகிறது. 100கிராம் எடையுள்ள வாழைப்பழத்தின் மூலம் 116 கிலோ கலோரி சக்தியும், 1.2 கிராம் புரதமும் கிடைக்கின்றன. 12,946 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### 3.6.6 இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் சமையல் எண்ணெய்

சத்துணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் சமையல் எண்ணெய் (Palmolein Oil) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் வழங்கப்படுகின்றன. சமையல் எண்ணெயில் வைட்டமின் ‘A’ மற்றும் வைட்டமின் ‘D’ உயிர் சத்துக்கள் சேர்த்து செறிவூட்டப்படுவது வைட்டமின் ‘A’ மற்றும் ‘D’ குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது. அயோடின் மற்றும் இரும்பு சேர்த்து செறிவூட்டப்பட்ட உப்பு முன்கழுத்துக் கழலை, இரத்த சோகை ஆகியவற்றைத் தடுக்கிறது.

## 3.7 தேசிய மதிய உணவுத் திட்டம்

- 1995ம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் மத்திய அரசால் ஆரம்பக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம் தொடங்கப்பட்டது. 1997–1998ஆம் ஆண்டு, நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஆரம்பக்கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற பெயர்,

பள்ளிகளில் ''தேசிய மதிய உணவுத் திட்டம்'' என மாற்றம் செய்யப்பட்டது.

- இத்திட்டத்தை செயல்படுத்திட, மத்திய மற்றும் மாநில அரசின் பங்காக 60 : 40 என்ற விகிதாசாரத்தில் நிதி அளிக்கப்படுகிறது. அரிசி, அதற்கான போக்குவரத்து செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு இனங்களுக்கான செலவினம் ஆகியவற்றை முழுவதுமாக மத்திய அரசு ஏற்கிறது.

- மதிய உணவு துவக்கப்பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு 450 கிலோ கலோரியுடன் 12 கிராம் புரதச்சத்தும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 700 கிலோ கலோரியுடன் 20 கிராம் புரதச்சத்தும் இருக்க வேண்டும் என மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் நலனை கருத்தில் கொண்டு மாநில அரசு துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 553.30 கிலோ கலோரிகளும், 18.12 கிராம் புரதமும், உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு 733.86 கிலோ கலோரிகளும், 21.64 கிராம் புரதமும் கொண்ட மதிய உணவினை வழங்கி வருகிறது.

- 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஒரு மெட்ரிக்டன் அரிசி ₹3,000 வீதமும் அதற்கான போக்குவரத்து செலவினமாக ₹750ம் மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் கீழ் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு பயனாளிக்கும் தினசரி உணவூட்டுச் செலவினம் ₹4.13 எனவும், 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ₹6.18 எனவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளது (பணியாளர்

ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் நீங்கலாக). இருப்பினும் மாநில அரசு தனது பங்களிப்பான 40 சதவிகிதத்தை விட கூடுதலாக செலவினம் மேற்கொள்கிறது.

(₹இல்)

| வகுப்பு | மதிய உணவு விதிமுறைகள் (60:40) | மத்திய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.13 | 2.48 | 1.65 | 2.98 | 7.11 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 6.18 | 3.71 | 2.47 | 1.03 | 7.21 |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 8.78 |

## 3.8 உணவு பொருட்கள் மேலாண்மை

- சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான உணவுப்பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய், கருப்பு கொண்டைக்கடலை மற்றும் பச்சைப்பயறு போன்றவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் விநியோகம் செய்யப்படுகின்றன.
- மாவட்ட அலுவலரின் தேவைப்பட்டியலின் அடிப்படையில் மைய அரசால் ஒதுக்கப்பட்ட அரிசி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் இந்திய உணவு கழகத்திடமிருந்து எடுக்கப்பட்டு சத்துணவு மையங்களுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படுகிறது.

- இத்திட்டம் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு முழு செலவினமும் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இதற்குப் பயன்படுத்தப்படும் அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் ஒரு மெட்ரிக்டன் ₹10,438 என்ற விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாடு உப்புக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்து சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்கிறது. இவ்வாறு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ள தொடரமைப்பின் காரணமாக சத்துணவு மையங்களுக்கு தங்குதடையின்றி உணவுப் பொருட்கள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.


- சத்துணவு தயாரிப்பதற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்கள் சத்துணவு அமைப்பாளர்களது வங்கி கணக்கில் மின்னணு பரிமாற்ற சேவை (ECS) மூலமாக வரவு வைக்கப்படும் முன்பணத் தொகையினை கொண்டு சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூரிலேயே வாங்கிப் பயன்படுத்தப்படுகிறது. சத்துணவு அமைப்பாளர்களுக்கு இச்செலவினம் மேற்கொள்வதற்காக துவக்கப்பள்ளி மாணவர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ₹1.17ம், உயர்துவக்கப்பள்ளி மாணவர் ஒருவருக்கு ₹1.27ம் வழங்கப்படுகிறது.

## 3.9 உட்கட்டமைப்பு வசதிகள்

### 3.9.1 வைப்பறையுடன் கூடிய சமையலறை

வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுவதற்கான மதிப்பீடு, மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் பரப்பளவு மற்றும் கட்டுமான செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. 100 குழந்தைகள் பயின்று வரும் பள்ளிகளுக்கு 20 சதுர மீட்டரும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 100 கூடுதல் குழந்தைகளுக்கும், கூடுதலாக 4 சதுர மீட்டர் பரப்பளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

2011 முதல் 31.3.2018 வரை 20,680 புதிய வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



### 3.9.2 சத்துணவு மையங்களை நவீனமயமாக்குதல்

சத்துணவு மையங்களை நவீன மயமாக்கி புகையில்லா சுற்றுச்சூழல் உருவாக்க நவீன எரிவாயு இணைப்புகள் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளன. மையம் ஒன்றுக்கு எரிவாயு இணைப்பிற்காக **₹22,350** வீதம் சமையல் மேடை கட்டுமானத்திற்கும், எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு பெறுவதற்கும் (பாதுகாப்பு வால்வு உள்ளிட்டவை) வழங்கப்பட்டுள்ளன. **35,713** மையங்களுக்கு எரிவாயு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எரிவாயு அடுப்புகளை கையாளுவது குறித்த பயிற்சிகள் அந்தந்த எரிவாயு முகவர்கள் மூலம் சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 3.9.3 சமையல் உபகரணங்கள்

சமையல் இலகுவாக செய்திட அரசால் **19,230** பிரஷர் குக்கர்கள் **₹2,500** வீதம் **₹480.75** இலட்சம் செலவினத்தில் சத்துணவு மையங்களுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து சத்துணவு மையங்களுக்கும் தேவையான சமையல் உபகரணங்களான மூடியுடன் கூடிய சமையல் பாத்திரம், கரண்டி மற்றும் இன்டோலியம் கடாய் ஆகியவை

வழங்கப்பட்டுள்ளன. அதற்காக மையத்திற்கு ₹5,000 வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, **2017–2018**ஆம் ஆண்டில் **12,000** மையத்திற்கு ₹**6.00** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தினசரி சமையலுக்குப் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்களின் எடையினை அளவிட ஒவ்வொரு மையத்திற்கும் மின்னணு எடைக் கருவிகள் வழங்கிட **43,200** எடைக் கருவிகளுக்கு ₹**1.86** கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 3.10 கண்காணிப்பு நெறிமுறை

- அரசு தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் திட்ட செயலாக்கத்தினை ஆய்வு செய்யவும், கண்காணிக்கவும் மாநில அளவிலான வழிப்படுத்தும் மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது
- வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்ய அனைத்து சத்துணவு மையங்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக சத்துணவுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை, சத்துணவு உட்கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை, தினசரி உணவுப் பட்டியல், துவக்கப்பள்ளி மற்றும் உயர்துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு ஆகியவற்றை குறிக்கும் தகவல் பலகை பள்ளியில் வைக்கப்பட்டுள்ளது.

- சிறப்பு நேர்வாக 2013 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்தில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்க சமுதாய தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை, அதாவது ஜனவரி 26 மற்றும் ஆகஸ்டு 15ஆம் நாளன்று கிராம சபையில் சத்துணவு மையத்தின் கணக்குகள் பார்வைக்கு வைக்கப்பட்டு, மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த உத்வேகத்துடன் கலந்து கொண்டு திட்ட செயலாக்கம் பற்றி விரிவாக கலந்துரையாடப்படுகிறது.

- சத்துணவு மையங்களை திடீர் ஆய்வு மேற்கொள்ள, மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் போது சமைத்து வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவு, உணவு உண்ணும் மாணவர்களது எண்ணிக்கை, கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள், பதிவேடுகள் பராமரிப்பது ஆகியவை கண்காணிக்கப்படுகின்றன.

- குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறுவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உணவினை சுவைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள் ‘‘உணவு சுவை பதிவேடு’’ ஒன்றையும் இது தொடர்பாக பராமரித்து வருகின்றனர்.

- அனைத்து சத்துணவு மையங்களும் உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு சட்டம் 2006ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- சமைத்த உணவின் மாதிரிகள் மாநில உணவு மற்றும் மருந்துப் பொருள் நிர்வாகத் துறையினால் சேகரிக்கப்பட்டு நுண்ணுயிரி தொற்றினை கண்டறிய பரிசோதிக்கப்படுகின்றன. **2017–2018**ஆம் ஆண்டில் **83** உணவு மாதிரிகள் **6** மண்டல உணவு ஆய்வு கூடங்களில் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

- மேலாண்மைத் தகவல் அமைப்பின் கீழ் அனைத்து சத்துணவு மையங்கள் மற்றும் பயனாளிகள் விவரங்கள் அரசு இணையதளத்தில் மாதந்தோறும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

- குறுஞ்செய்தி மூலம் கண்காணிப்பு முறை **01.07.2017** முதல் செயல்படுத்தப்படுகிறது. இம்முறை மேலாண்மைத் தகவல் அமைப்பின் நிகழ் நேர சத்துணவு அறிக்கையினை சேகரித்து தொகுத்து அளிக்கும் தானியங்கி முறையாகும். இதில் உணவு உண்ணும் குழந்தைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு பள்ளி தலைமை ஆசிரியர்/ஆசிரியர் மூலம் குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டு தேசிய தகவல் மையத்தின் இணைய தள சேவையில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இப்பணிக்கு **₹38.05** இலட்சம் 'பாரத் சஞ்சார் நிகாம்' மூலம் செலவிடப்பட்டுள்ளது.

- சத்துணவு உண்ணும் மற்றும் சத்துணவு உண்ணாத குழந்தைகளிடையே ஊட்டச் சத்து நிலையினை ஒப்பீடு செய்யவும், திட்டத்தின் முன்னேற்றத்திற்கான வழிகளை கண்டறியவும் **2017–2018**ஆம் ஆண்டில் **₹2.35** இலட்சத்தில் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 3.11 பயிற்சித் திட்டம்

ஊட்டச்சத்து, சுகாதாரம், தன் சுத்தம், உணவுப் பொருட்களை பாதுகாப்பது மற்றும் சமையலறை கழிவுகளை அகற்றுவது குறித்த பயிற்சிகள் சத்துணவு பணியாளர்களுக்கு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. கலவை உணவு தயாரித்தல் குறித்த பயிற்சி பிரபல சமையல்கலை நிபுணர்களால் அளிக்கப்பட்டுள்ளது. ₹54.08 இலட்சம் செலவில் 72,112 சத்துணவு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 3.12 பள்ளி சுகாதாரத் திட்டம்

சுகாதாரத் துறையின் மூலம் பள்ளிக் குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை மையமாக கொண்டு, மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

பள்ளி சுகாதார திட்டத்தில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

i. இரத்தசோகை, பொது சுகாதாரம் மற்றும் இதர சுகாதார பிரச்சனைகளை பரிசோதித்தல் – சுகாதார பராமரிப்பு மற்றும் தொடர் சிகிச்சைக்கான பரிந்துரை

ii. நோய் எதிர்ப்பு, கண் மற்றும் பல் பரிசோதனை

iii. இரும்பு சத்துடன் கூடிய போலிக் அமில (IFA) மாத்திரைகள் வழங்குதல்

iv. குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குதல்

v. அனைத்து குழந்தைகளுக்கும் சுகாதார அட்டைகளைப் பராமரித்தல்.

## 3.13 சத்துணவுப் பணியாளர்கள்

### ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை

- ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும், சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் ஆகிய மூன்று பதவிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. பள்ளியில் பயனாளிகளின் எண்ணிக்கை 500க்கும் மேல் இருந்தால் கூடுதலாக ஒரு சமையல் உதவியாளரை நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பெண்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்படுகின்றனர்.
- விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட சிறப்பு பிரிவினர்களுக்கு சத்துணவு பணியிடங்களில் 25 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கு சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களில் 4 சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒப்பளிக்கப்பட்டுள்ள சத்துணவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச ஊதிய விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவி | ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள் | குறைந்த / அதிகபட்ச சம்பள விகிதம் (₹) |
|---|---|---|---|
| 1 | சத்துணவு அமைப்பாளர் | 42,423 | 10,045 – 14,770 |
| 2 | சமையலர் | 42,852 | 6,265 – 7,840 |
| 3 | சமையல் உதவியாளர் | 42,855 | 5,110 – 6,160 |
| **மொத்தம்** | | **128,130** | |

“பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்” என வகைப்படுத்தப்பட்ட சத்துணவுப் பணியாளர்களின் வேலை நேரம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை ஆகும்.

சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு மாதாந்திர ஓய்வூதியம், ஒட்டுமொத்த தொகை, பண்டிகை முன்பணம், பொங்கல் போனஸ், மலைவாழ் படி மற்றும் குளிர்கால படி, சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், கூடுதல் பொறுப்புப்படி, குடும்ப நல நிதி, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பொது வருங்கால வைப்பு நிதி, மகப்பேறு விடுப்பு,

விருப்ப ஓய்வு, கருணை அடிப்படையிலான பணி நியமனம் ஆகிய கூடுதல் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**திட்டத்தின் விளைவு**

இத்திட்டத்தின் செயலாக்கத்தினால் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்தல், மாணவர்களின் பள்ளி இடைநிற்றலை குறைத்தல், முறையாக பள்ளிக்கு வருகை தருவதை உறுதி செய்தல் ஆகிய நேர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளன. மேலும் இத்திட்டம் பெண் கல்வியினை ஊக்கப்படுத்திடவும், குழந்தைகளது ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்திடவும் வழிவகை செய்கிறது.

**2018–2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1,917.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

******

## அத்தியாயம் – 4

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என்பது **0–6** வயது வரையிலுள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு, முன்பருவக் கல்வி, ஆரம்ப சுகாதார கவனிப்பு போன்ற பல சேவைகளைத் தொகுத்து வழங்கும்வகையில் உருவாக்கப்பட்டத் திட்டமாகும். அங்கன்வாடி மையம் - ‘‘குதூகல விளையாட்டு மையம்’’– இது கிராமம் மற்றும் குக்கிராமத்தில் உள்ள பின் தங்கிய சமுதாயத்தினருக்கென அரசு அமைப்பு மற்றும் நலப்பணிகளின் அடையாளம் ஆகும். நலிவடைந்த சமுதாயத்தில் உள்ள சிறு குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் பெண்களுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு நலத் திட்டங்கள், ஆரம்ப சுகாதார கவனிப்பு மற்றும் நலக்கல்விப் பணிகளை ஒருங்கிணைத்து மக்களுக்கு அளிப்பதற்கான ஒரு மையம் அங்கன்வாடி மையம்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது இந்தியாவில், மகாத்மா காந்தியடிகளை பெருமைப்படுத்தும்

வண்ணம் அவர்களது **106**வது பிறந்த நாள் அன்று **1975**ஆம் ஆண்டு **33** திட்டங்கள் கொண்டு துவங்கப்பட்டது. தமிழகத்தில் சென்னை (நகர்புறம்), நிலக்கோட்டை (ஊரகம்) மற்றும் தளி (மலைப்பகுதி) திட்டம் ஆகிய மூன்று இடங்களில் இத்திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் தற்போது அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தை "ஊட்டச்சத்துக் குறைபாடில்லா மாநிலமாக" மாற்றுவதே இத்திட்டத்தின் முக்கிய இலக்காக உள்ளது. பயனாளிகளின் மேம்பாட்டுக்காக வாழ்க்கை சுழற்சி அணுகுமுறையில் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்திட தொடர் கவனிப்பு அளிப்பதற்கான ஒட்டுமொத்த மைய பகுதியாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் விளங்குகிறது.

## 4.1 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் தொலைநோக்கு பார்வை


**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்:—**

i. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைத்தல்

ii. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு, குழந்தைநேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றல்

iii. ஆண்–பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்துதல்

## 4.2 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு



## 4.3. நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள்

- அனைத்து நிலைகளிலும் அத்தியாவசிய பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல்.

  — ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்தல், குழந்தைகள் வாழ்க்கையை நல்லமுறையில் துவங்க தேவையானவற்றை உறுதி செய்தல், மூன்று வயதிற்குட்பட்ட ஆரம்ப கால குழந்தைகளின் கவனிப்பு மற்றும் கற்கும் சூழ்நிலைக்கு சிறப்பு கவனம் அளித்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தைக் குழும இயக்ககத்தின் கீழ் செயல்படுத்துதல்.

- அனைத்து நிலைகளிலும் செயல்திறனை அதிகரித்தல்:

  — திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சாதனைகளை எய்த அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு குழு செயல்பாட்டின் அடிப்படையில் பணிபுரிய பயிற்சிகள் அளித்தல்.

- துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல்:

  — தரமான நலப்பணிகள் மக்களைச் சென்றடைய சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய துறைகளுடனான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல் மற்றும் பலப்படுத்துதல்.

- சமுதாய விழிப்புணர்வையும், பங்களிப்பையும் அனைத்து நிலைகளிலும் மேம்படுத்துதல்:

  — பயனாளிகள் மற்றும் பொது மக்களிடையே குழந்தை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் அளிக்கப்படும் நான்கு அடிப்படை குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அதற்கான தன்னார்வ ஈடுபாட்டையும், சமுதாய ஆதரவையும் மேம்படுத்துதல்.

- குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கான தகவல் தளம் மற்றும் அறிவு சார் தளத்தை அமைத்தல்:

  — ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மேலாண்மை தகவல் அமைப்பை பலப்படுத்துதல். அடிப்படை தகவல் அமைப்புக்காக தகவல் தொடர்புக்கான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல். தகவல்களைப் பரப்ப, பகிர்ந்து கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல், ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.

## 4.4. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலப்பணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் நோக்கங்கள் கீழ்காணும் ஆறு வகையான பணிகள் வாயிலாக அளிக்கப்படுகின்றன.

- இணை உணவு வழங்கல்
- முன்பருவக் கல்வி அளித்தல்
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
- தடுப்பூசிகள் அளித்தல்
- உடல் நலப் பரிசோதனை
- மருத்துவப் பரிந்துரை

## 4.5 ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள்

இந்திய அரசால் **2016–2017**ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குழுமம் என்பதனை ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் என பெயர் மாற்றம் செய்யபட்டுள்ளது. **2017** ஆம் ஆண்டு தேசிய ஊட்டச்சத்துக் குழுமம் மற்றும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா போன்ற திட்டங்களை ஒருங்கிணைந்த குழந்தை

வளர்ச்சிப் பணிகள் திட்டக் குடையின்கீழ் கொணர்ந்துள்ளது. தற்போது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குடையின்கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. அங்கன்வாடி பணிகள் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்)
2. வளரிளம் பெண்களுக்கான திட்டம் (முன்னதாக இராஜீவ் காந்தி வளரிளம் பெண்கள் மேம்பாட்டு திட்டம் (சப்லா))
3. குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் (முன்னதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்)
4. தேசிய குழந்தைகள் காப்பக திட்டம் (முன்னதாக இராஜீவ் காந்தி தேசிய குழந்தைகள் காப்பக திட்டம்)
5. தேசிய ஊட்டச்சத்துக் குழுமம்
6. பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் (PMMVY)

## 4.6 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினைப் பரவலாக்குதல் – புதிய மையங்கள் துவக்குதல்

இந்தியா முழுவதுமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினை பரவலாக்கவும், 14 இலட்சம் அங்கன்வாடி மையங்களை (குழந்தைகள் மையங்களை)

செயல்படுத்தவும், மத்திய அமைச்சக கூட்டுக் குழு சிறப்பு பணி பிரிவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு புதிய மையங்களை உருவாக்க மக்கள் தொகை, ஊட்டச்சத்து, நிதி தொடர்பான வழி முறைகளைத் திருத்தி அமைத்துள்ளது.

மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி குழந்தைகள் மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை அளவுகோல் விவரங்கள்:–

| திட்டப் பகுதியின் வகைபாடு | முதன்மை மையம் | | குறு மையம் | |
|---|---|---|---|---|
| | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிகபட்ச மக்கள் தொகை | குறைந்தபட்ச மக்கள் தொகை | அதிகபட்ச மக்கள் தொகை |
| ஊரகப்பகுதி | 400 | 800 | 150 | 400 |
| நகர்புறம் | 400 | 800 | 150 | 400 |
| மலைப்பகுதி | 300 | 800 | 150 | 300 |

தமிழகத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் **49,499** முதன்மை அங்கன்வாடி மையங்கள், **4,940** குறு அங்கன்வாடி மையங்கள் ஆக மொத்தம் **54,439** மையங்கள் **434** திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இதில் **385** திட்டப் பகுதிகள் ஊரகப்

பகுதிகளிலும், 47 திட்டப் பகுதிகள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டப் பகுதிகள் மலைப் பகுதிகளிலும் செயல்படுகின்றன.

## 4.7 திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள்

1. பிறந்தது முதல் 72 மாதம் முடிய உள்ள குழந்தைகள்
2. வளரிளம் பெண்கள் (11 – 14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்கள் மட்டும்)
3. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்

## 4.8 நிதி ஒதுக்கீடு

**2018–2019 ஆம் ஆண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹2,606.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.9 இணை உணவு

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பல்வேறு ஊட்டச்சத்து திட்டங்களைச் செயல்படுத்தி ‘ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலம்’ என்ற நிலையை அடைவதற்கு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அங்கன்வாடி பயனாளிகள் அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு

இவற்றிற்கு இடையே ஏற்படும் சக்தி மற்றும் புரதச்சத்து குறைபாட்டினைச் சரி செய்ய ஏதுவாக கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.9.1 ஊட்டச்சத்து மாவு

பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை அதிகப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் பயனாளிகளான 6 மாதம் முதல் 60 மாதம் வரையிலான குழந்தைகள், 11–14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்கப்படுகிறது. ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ள 5 மாவட்டங்களில் உள்ள 3–5 வயதுடைய மிதமான மற்றும் கடும் எடை குறைவுள்ள குழந்தைகளுக்கும் கூடுதலாக இணை உணவு வழங்கப்படுகிறது.

**சத்துமாவில் அடங்கியுள்ள மூலப் பொருட்கள்**

| வ. எண் | மூலப் பொருட்கள் | கிராம் |
|---|---|---|
| 1 | கோதுமை/சோளம்/கம்பு | 52 |
| 2 | வெல்லத் தூள் | 30 |
| 3 | கடலைப் பருப்பு | 12 |
| 4 | முளைகட்டிய கேழ்வரகு | 5 |
| 5 | தாதுக்கள் (ம) வைட்டமின் கலவை | 1 |
| | **மொத்தம்** | **100** |

## 4.9.2 வார உணவு அட்டவணை

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு / சத்துணவு வழங்கப்படும் அளவுகள் | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயதுடைய குழந்தைகள் | இணைஉணவு | இயல்பான மற்றும் மிதமான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 150 கிராம் இணை உணவு மற்றும் கடுமையான எடை குறைவுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 240 கிராம் | 3,61,075 |
| 1 முதல் 2 வயதுடைய குழந்தைகள் | இணைஉணவு + வேகவைத்த முட்டை வாரத்திற்கு ஒன்று (புதன் கிழமை) | இயல்பான மற்றும் மிதமான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 150 கிராம் இணை உணவு மற்றும் கடுமையான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 240 கிராம் | 6,84,797 |
| 2 முதல் 3 வயதுடைய குழந்தைகள் | இணைஉணவு + சத்துணவு + 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை/ அல்லது பச்சைப் பயறு (செவ்வாய் கிழமைகளில்), வேகவைத்த உருளைக்கிழங்கு (வெள்ளிக்கிழமைகளில்) + வாரத்திற்கு 3 வேகவைத்த முட்டைகள் (திங்கள், புதன் மற்றும் வியாழன்), முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | இயல்பான(ம) மிதமான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 130 கிராம், கடுமையான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 190 கிராம் மற்றும் விதவிதமான கலவை சாதம் | 7,11,832 |
| 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் | இணைஉணவு + சத்துணவு + 20 கிராம் கருப்பு | இயல்பான மற்றும் மிதமான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு | 6,40,120 |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டைக்கடலை/ அல்லது பச்சைப் பயறு (செவ்வாய் கிழமைகளில்), வேகவைத்த உருளைக்கிழங்கு (வெள்ளிக்கிழமைகளில்) + வாரத்திற்கு 3 வேகவைத்த முட்டைகள் (திங்கள், புதன் மற்றும் வியாழன்), முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | நாளொன்றுக்கு 10 கிராம் இணை உணவு மற்றும் கடுமையான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 100 கிராம் மற்றும் விதவிதமான கலவை சாதம் | |
| | | **மொத்த குழந்தைகள்** | **23,97,824** |
| கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | இணைஉணவு | நாளொன்றுக்கு 220 கிராம் | 6,65,067 |
| வளரிளம் பெண்கள் (11 முதல் 14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்கள் மட்டும்) | இணைஉணவு | நாளொன்றுக்கு 130 கிராம் | 2,663 |
| | | **மொத்த பயனாளிகள்** | **30,65,554** |

இணை உணவுக்கான செலவினத்தை மத்திய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதாச்சாரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றாலும், தமிழக அரசு இந்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாக செலவினம் மேற்கொள்கிறது. மாதந்தோறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சத்துமாவு, உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற பகுப்பாய்வு கூடங்களில் ஆய்வு செய்யப்படுகிறது.

## 4.10 ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் இணை உணவு வழங்குதல்

கரூர், மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களை ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயால் அதிக பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களாக கண்டறியப்பட்டுள்ளன. ஊட்டச்சத்துக் குறைபாடு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயிற்கான ஒரு காரணம் என்பதால் அம்மாவட்டங்களில் உள்ள 37 முதல் 60 மாதமுடைய மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு நாளொன்றுக்கு 80 கிராம் வீதம் வருடத்திற்கு 300 நாட்களுக்கு கூடுதலாக இணைஉணவு அங்கன்வாடி மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

மேலும், சுகாதாரத் துறையின் தொடர் கண்காணிப்பினாலும், இத்துறையின் மூலம் வழங்கப்படும் இணை உணவினாலும் இந்நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

## 4.11 அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் பல்வேறு வகையான கலவை சாதம் (2 முதல் 5+ வயதுடைய குழந்தைகள்)

அங்கன்வாடி மையத்தில் பயன்பெறும் 5+ வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனை பெற்று பின்வரும் பல்வேறு வகையான கலவை சாத வகைகள் **20.03.2013** முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து **15.08.2014** முதல் மாநிலத்தின் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

| **கிழமை** | **உணவு வகைகள்** |
|---|---|
| திங்கள் | தக்காளி சாதம் + வேக வைத்த முட்டை |
| செவ்வாய் | கலவை சாதம் + கருப்பு கொண்டைக்கடலை (அ) பச்சைப் பயறு |
| புதன் | காய்கறி புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக் கிழக்கு |
| சனி | கலவை சாதம் |
| ஞாயிறு | வீட்டிற்கு எடுத்து செல்லும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் |

விதவிதமான கலவை சாதம் வழங்குவதற்காக உணவூட்டுச் செலவினத்தை **56** பைசாவிலிருந்து, பருப்பு

பயன்படுத்தும் நாட்களுக்கு ₹1.13 ஆகவும், பருப்பு பயன்படுத்தாத நாட்களுக்கு ₹1.35 ஆகவும் அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

### 4.12 செறிவூட்டப்பட்ட உணவு பொருட்கள்

இந்திய உணவு மற்றும் பாதுகாப்பு தர நிர்ணய அதிகார அமைப்பானது, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006 ன் கீழ் செறிவூட்டப்பட்ட உணவு பொருட்களுக்கான ஒருங்கிணைந்த விதி முறைகளை வகுத்துள்ளது. இதனடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், மதிய உணவு திட்டம் மற்றும் பொது விநியோக திட்டங்களின் கீழ் பயன்படுத்தப்படும் / வழங்கப்படும் உப்பு, கோதுமை மாவு மற்றும் சமையல் எண்ணெய் கண்டிப்பாக செறியூட்டப்பட்டிருப்பதை உறுதி செய்யுமாறு 2017 ஆம் ஆண்டு அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு அறிவுரை வழங்கியுள்ளது. குழந்தைகளின் ஊட்டச்சத்து நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு, செறியூட்டப்பட்ட அயோடின் உப்பினை 1991 ஆம் ஆண்டு முதலே சத்துணவுத் திட்டத்தில் அறிமுகம் செய்து, தற்போது இருமுறை செறியூட்டப்பட்ட உப்பினை பயன்படுத்தி வருகிறது.

- அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் தமிழ்நாடு உப்புக் கழகத்தின் மூலம் இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு விநியோகிக்கப்பட்டுவருகிறது.
- அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வைட்டமின் ‘ஏ’ மற்றும் வைட்டமின் ‘டி’ செறிவூட்டப்பட்ட ஆர்ஜிமோன் எண்ணெய் கலக்காத பாமாயில் தமிழ்நாடு உணவுப் பொருள் வாணிபக் கழகம் மூலம் விநியோகிக்கப்படுகிறது.
- இணை உணவின் ஊட்டச் சத்தினை மேம்படுத்துவதற்காக நுண்ணூட்ட சத்துக்கள் மற்றும் கரையும் தன்மையுடைய வைட்டமின்கள் ஆகியன சேர்க்கப்படுகின்றன.

## 4.13 சுகாதாரம்

### 4.13.1 எடை கண்காணித்தல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும், பிறந்தது முதல் 5 வயதுடைய குழந்தைகளின் எடை எடுக்கப்பட்டு அங்கன்வாடி மையங்களில் பராமரிக்கப்பட்டு வரும் உலக சுகாதார அமைப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. அதிலுள்ள வளர்ச்சிக்கோடு வளைவின் மூலம் ஊட்டச்சத்து நிலை மதிப்பீடு செய்யப்பட்டு ஊட்டச்சத்து குறைபாட்டினை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அங்கன்வாடி மைய பயனாளிகளின் எடையை கண்காணிக்கும் விதத்தில், வயதுக்கேற்ற வகையில் குழந்தைகள் எடைக்கருவி, பார் எடைக்கருவி மற்றும் பெரியவர்கள் எடைக்கருவி ஆகியன அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 4.13.2 சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைந்த செயல்பாடுகள்

சுகாதாரத்துறையுடன் ஒன்றிணைந்த செயல்பாடுகளில், குறிப்பாக குழந்தைகள் மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு தடுப்பூசிகள் வழங்குதல், இரும்பு சத்து மாத்திரைகள் வழங்குதல், குடற்புழு நீக்க மாத்திரை/சிரப் வழங்குதல், அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரைத்தல் மற்றும் வைட்டமின் “ஏ” வழங்குதல் போன்ற செயல்பாடுகளை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் மற்றும் சுகாதாரத் துறை பணியாளர்களை ஒன்றிணைந்து கவனமாக திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.13.3 மருந்து மற்றும் சுகாதாரப் பெட்டிகள் வழங்குதல்

பொதுவான உடல் உபாதைகளான காய்ச்சல், பேதி, காயம், தோல் தொற்று ஆகியவற்றை சமாளிக்கும் வகையில் எளிதாக பயன்படுத்தக் கூடிய மருந்துப் பொருட்கள் அடங்கிய

மருந்துப் பெட்டிகள் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கைத்துண்டு, சீப்பு, நகவெட்டி மற்றும் சோப்பு அடங்கிய சுகாதார பெட்டிகளும் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**மருந்து / சுகாதாரப் பெட்டிகள் வாங்கி வழங்குவதற்காக 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ₹519.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.14 ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது கருவாக உருவானது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் உடல் இயக்க, மொழி, அறிவு, சமூக மற்றும் மன எழுச்சி, படைப்பாற்றல் மற்றும் அழகுணர்வைப் பாராட்டுதல் ஆகிய அனைத்து வளர்ச்சிகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து அம்சங்களும் ஒருங்கே கிடைக்கப் பெறுவதையும் உறுதி செய்யும் திட்டங்களையும் சலுகைகளையும் குறிக்கிறது. இத்திட்டம் குழந்தைகளின்

வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு வளர்ச்சி படிநிலைக்கும் முன்னுரிமை அளிப்பதாக உள்ளது. **3** வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தேவைகளான கவனிப்பு, ஆரம்ப கால தூண்டுதல் செயல்பாடுகள், உரையாடுதல் போன்றவைகளையும், **3–6** வயது குழந்தைகளின் வளர்ச்சிகளை பூர்த்தி செய்யக்கூடிய முன்பருவக் கல்வியும், **5–6** வயது குழந்தைகளுக்கு திட்டமிட்ட செயல்பாடுகள் மூலம் பள்ளி செல்ல தயார்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையங்கள் **"எழுச்சி மிகு மையங்களாக"** மாற்றப்பட்டு இனிமையான கற்றல் சூழலைத் தரக்கூடிய குழந்தைநேய மையங்களாக செயல்பட்டு வருகின்றன. பச்சிளம் குழந்தைகளுக்கு பராமரிப்பு, தூண்டுதல், உரையாடுதல் **(3** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு**)** போன்ற செயல்பாடுகள், **3** முதல் **6** வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, மேம்படுத்தப்பட்ட முன்பருவக்கல்வி, **(5–6)** வயது குழந்தைகளுக்கு பள்ளிக்கு செல்ல தயார்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை தினசரி **4** மணி நேரத்திற்கு திட்டமிட்டு, அர்ப்பணிப்பு உணர்வுடன்

குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு உள்ளது.

தேசிய ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை 2013–இன் அடிப்படையில், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மூலம் மாநில தேவைக்கேற்ப, குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ற வகையில், சூழ்நிலைக்கு உகந்த என்ற "**ஆடிப்பாடி விளையாடு பாப்பா**" என்ற ஆண்டு புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அது மத்திய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு, அங்கன்வாடி மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இப்பாடத் திட்டம் 11 மாதத்திற்கு உரிய தலைப்புகளில் செயல்பாடுகளை குழந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 12 ஆம் மாதம் நினைவூட்டலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையான கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கான ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக்கான பாடத்திட்டப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான செயல்பாட்டு புத்தகங்கள், ஆய்வுத் தாள்கள் மற்றும் முன்பருவ கல்வி உபகரணங்கள்

ஆகியவை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 4.14.1 முன்பருவ கல்வி நிறைவு சான்றிதழ்கள்

அங்கன்வாடியில் முன்பருவக் கல்வி பயின்று பள்ளிக்கு செல்லும் 2–5 வயது குழந்தைகளுக்கு **“முன்பருவ கல்வி நிறைவு சான்றிதழ்கள்”** அங்கன்வாடி மையம் மூலம் வழங்கப்படுகின்றன. **2017–2018**ஆம் ஆண்டில் **2,41,275** நிறைவு சான்றிதழ்கள் அங்கன்வாடி குழந்தைகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

### 4.14.2 ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சி

தேசிய ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கைகளையும் அதன் கருத்துக்களையும் புரிந்து கொண்டு குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கவனிப்பு மற்றும் ஆரம்பகால கற்றலுக்கான வாய்ப்புகளை வழங்கிடத் தக்க வகையில் அங்கன்வாடி பணியாளர்களின் திறன்களை மேம்படச் செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இப்பயிற்சியானது மூன்றடுக்கு முறையில், மாநில, மாவட்ட மற்றும் தொகுதி அளவில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் **“ஆடிப்பாடி விளையாடு பாப்பா”** பாடத் திட்டத்தில்

குழந்தைகளுக்கான செயல்பாட்டுப் புத்தகங்கள் மற்றும் ஆய்வுத் தாள்கள் ஆகியவற்றை பயன்படுத்தும் விதம் குறித்த அம்சங்கள் உள்ளன.

**இத்திட்டத்திற்கென 2018–2019 ஆம் ஆண்டில் வரவு–செலவு திட்டத்தில் ₹1,800.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.15 அங்கன்வாடி குழந்தைகளுக்கு இலவச வண்ணச் சீருடைகள்

அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு தவறாது அனுப்பிட ஊக்குவிக்கும் வகையிலும், பயனாளிகளை அதிகப்படுத்துவதற்கும், ஊட்டச்சத்து மற்றும் முன் பருவ கல்வி வழங்குவது மட்டுமல்லாமல், ஒரு குழந்தைக்கு ₹262.50 மதிப்பில் இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டம் சென்னை, வேலூார், தேனி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூார், அரியலூார், நாகப்படடினம், மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் மாநில நிதியினை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 3.80 இலட்சம் குழந்தைகள் (2முதல் 5 வயது) பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2018–2019 ஆம் நிதி ஆண்டில் ₹935.61 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.16 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

ஒவ்வொரு அங்கன்வாடி மைய கட்டடமும் நல்ல ஸ்திர தன்மையுடன் இருத்தலையும், குழந்தைகளுக்கு ஏற்ற உட்கட்டமைப்பு வசதிகளான குழந்தைகளுக்கென தனியாக ஒரு அறையும், சமைப்பதற்கென தனியாக ஒரு அறையும், உணவு பொருட்களை பாதுகாப்பான முறையில் வைத்திட பாதுகாப்பு அறையும், குழந்தை நேய கழிப்பிடமும் மற்றும் விளையாடுவதற்கான காலி இடமும் இருப்பதை உறுதி செய்வதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மொத்தம் 1500 முதல் 2000 சதுர அடி பரப்பளவு உள்ள நிலத்தில் குறைந்த பட்சம் 600 சதுர அடியில் ஒரு அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு வருகிறது.



அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 வரையில் 9,385 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் பல்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் கட்டப்பட்டு உள்ளன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம் 2016–2017ஆம் ஆண்டு மற்றும் 2017–2018 ஆம் ஆண்டில் 2,000 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணிகள் துவக்கப்பட்டு, இதுவரை 756 அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மையங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 4.17 அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதல்

அங்கன்வாடி மையங்களில் புகையில்லா சூழ்நிலையினை உருவாக்கிடும் பொருட்டு, ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் எரிவாயு இணைப்புடன் கூடிய

எரிவாயு அடுப்பு, பிரஷர் குக்கர் மற்றும் சமையல் மேடை அமைத்தல் ஆகிய பணிகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை பயன்படுத்தி நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் **51,863** அங்கன்வாடி மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.



## 4.18 அங்கன்வாடி மையங்களுக்கு கொசு வலை மற்றும் பாய்கள் வழங்குதல்

அங்கன்வாடி மையத்திற்கு வருகை தரும் **2** வயது முதல் **5** வயது வரையிலான குழந்தைகளை கொசுக்கடியின் மூலம் பரவுகின்ற நோய்களிலிருந்து பாதுகாக்கவும் மற்றும் குழந்தைகள் மதிய உணவுக்கு பின் தூங்குவதற்கு வசதியாகவும் **₹571.98** இலட்சம் செலவில் ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் **₹300** மதிப்பில் ஒரு கொசு வலையும், ஒரு கோரைப்பாய் **₹360** வீதம் இரண்டு கோரை பாய்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 4.19 அங்கன்வாடி மையங்களுக்கு இந்திய தர அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல் (ISO)

அங்கன்வாடி மையங்களுக்கு இந்திய தர அங்கீகாரச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள அங்கன்வாடி மையங்கள் அகம், புறம் இரண்டிலும் குழந்தை நேயமாகவும், கல்வித் திறனுடையதாகவும் மறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்திய தர அங்கீகாரம் வழங்குவதற்கு உரிய பல்வேறு அடிப்படை கூறுகள் / அளவீடுகள் அனைத்தும் அங்கன்வாடி மையங்களில் பின்பற்றப்பட வேண்டும். 2017–2018 ஆம் ஆண்டில் ஒரு மாவட்டத்தில் நான்கு அங்கன்வாடி மையங்கள் வீதம் 32 மாவட்டங்களில் மொத்தம் 128 அங்கன்வாடி மையங்களில் ₹32.80 இலட்சம் செலவில் இந்திய தர அங்கீகாரச் சான்றிதழ் வழங்கிட தேர்வு செய்யப்பட்டுள்ளன.


BMSCERT
Quality Assessors

CERTIFICATE OF REGISTRATION

*This is to certify that the Quality Management System of*

**ANGANWADI CENTER**
Perumal Kovil East Street, Reddiyar Patti (Near by Library), Tirunelveli – 627 007. Tamilnadu, India.

*has been assessed and approved in accordance with the guidelines of*

ISO 9001:2015

*for the following areas*

**Providing Supplementary Nutrition, Immunization, Health Check-up, Referral Services, Pre School and Non-Formal Education, Nutrition and Health Education**

Certified Location: Perumal Kovil East Street, Reddiyar Patti (Near by Library), Tirunelveli – 627 007. Tamilnadu, India.

Validity of this certificate can be verified at www.bmscert.org/verify

Director Director

Initial Registration Date: November 27, 2017
Date of Certificate: November 27, 2017
Valid Upto: November 26, 2018
Recertification Due: November 26, 2020

Q-4418/17
Certificate No.

IAF
DAC
CB 005
BMSCERT Quality Assessors

317, Aggarwal Modern Bazar, C-33, Lawrence Road, Delhi-35, India
Ph. : 91-11-27101017, +91-9310501017, Website : www.bmscert.org, email : info@bmscert.com

தேர்வு செய்யப்பட்ட அங்கன்வாடி மையங்களில் போதுமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், பொழுது போக்கு அம்சங்கள், சுவர்களில் வர்ணம் தீட்டுதல் மூலம் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த தகவல்கள், காய்கறி தோட்டம், குழந்தை மற்றும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையினை கணக்கிடும் வளர்ச்சி கண்காணிப்பு அட்டை, பதிவேடுகள் பராமரிப்பு, சுகாதாரப்பழக்கங்களை ஊக்குவித்தல் ஆகியவை ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பொது மக்கள் ஊக்குவிப்பின் மூலம் சமுதாய பங்களிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய தர அங்கீகார சான்று வழங்கும் நிறுவனங்கள் மூலம் மேற்கூறிய அளவீடுகள் ஆய்வு செய்யப்பட்டு அதனடிப்படையில் 128 அங்கன்வாடி மையங்களுக்கு இந்திய தர அங்கீகார சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து, அங்கன்வாடி மையங்களில் தரமான ஊட்டச்சத்து மற்றும் சுகாதார சேவைகளை உறுதி செய்வதற்கு, மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட முயற்சியாகும்.

### 4.20 வளரிளம் பெண்களுக்கான திட்டம் (SAG)

இத்திட்டத்தின் நோக்கம் 11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் கல்வி, தன்னுரிமை மேம்பாடு, சுகாதாரம், ஊட்டச்சத்து, சுயமதிப்பு மிக்கவர்களாக உயர்த்துதல் மற்றும் அவர்களை மீள பள்ளிக்கு கல்வி / முறை சாரா கல்வி கற்க அனுப்புவதற்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கி விழிப்புணர்வு மிக்கவர்களாக்குதல் ஆகும்.

வளரிளம் பெண்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு கூறுகளை கொண்ட ராஜுவ் காந்தி வளரிளம் பெண்களுக்கான தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டமானது, தற்பொழுது இந்திய அரசால் ‘வளரிளம் பெண்களுக்கான திட்டம்’ என பெயர் மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்தியா முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டு, 11 முதல் 14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு மட்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இணைஉணவு வழங்குதல் மற்றும் இணை உணவில்லாத பிற பணிகள் என இரண்டு பிரிவுகளை உள்ளடக்கியது. அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்த

11 முதல் 14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு நாளொன்றுக்கு தலா 130 கிராம் இணை உணவு (வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில்) வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இதற்கான 50% நிதியை மாநில அரசு அளிக்கிறது.

இத்திட்டத்தின் ஊட்டசத்து அல்லாத கூறுகளானது 11–14 வயது பள்ளி செல்லா வளர் இளம் பெண்கள் மீண்டும் பள்ளி செல்வதையும் அல்லது திறன்வளர் பயிற்சி பெறுவதையும் மற்றும் கற்றலுக்கான பாலம்/திறன் வளர் பயிற்சிக்கு மாறுதலுக்கு துணை நின்று ஊக்குவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. அங்கன்வாடி பணியாளர்கள், பஞ்சாயத்து முக்கிய பிரமுகர்கள், பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் இதர துறையை சார்ந்தவர்கள் உதவியுடன் வீடுகளை பார்வை மேற்கொண்டு 11–14 வயதுடைய பள்ளி செல்லா வளரிளம் பெண்களை கண்டறிதல் வேண்டும். இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், உடல் நலப் பரிசோதனை, பரிந்துரைகள், ஊட்டச்சத்து மற்றும் உடல்நலக் கல்வி, வாழ்க்கைத் திறன் பயிற்சி, ஆலோசனைகள் அல்லது

வழிகாட்டுதல் போன்ற பொது சேவைகள், இணை உணவல்லாத பிற பணிகள் கீழ் வழங்கப்படுகிறது.

இந்திய அரசு, 11–14 வயதுக்குட்பட்ட பள்ளி செல்லா வளரிளம் பெண்கள் ஊட்டசத்து இல்லாத மேற்கூறப்பட்டுள்ள பிற சேவைகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள 434 திட்டங்களுக்கு 60:40 என்ற விகிதத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு திட்டத்திற்கு ₹1.10 இலட்சம் வீதம் அனுமதித்துள்ளது.

**இத்திட்டத்திற்கு 2018–2019 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டில் ₹528.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.21 தேசிய குழந்தைகள் காப்பக திட்டம்**

சமுதாயத்தில் பெண்கள் தன்னுரிமை பெறும் வகையில் பணிக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைளை பாதுகாப்பாக பராமரிக்கும் வகையிலும், இக்காப்பகங்களில் பராமரிக்கப்படும் 6 மாதம் முதல் 6 வயதுடைய குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு மேம்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இக்குழந்தைகள் பயிற்சி பெற்ற இரண்டு காப்பக பணியாளர்களால் காலை முதல் மாலை வரை பராமரிக்கப்பட்டு வருவதுடன் அவர்களின் தசை மற்றும் மூளை வளர்ச்சி நிலையினை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவுடன் கேளிக்கை செயல்கள் மற்றும் உரிய கல்வி வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் வழிமுறையின் படி கடந்த 2017 ஆம் ஆண்டு மத்தியில், தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வந்த 944 குழந்தைகள் காப்பகங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு 60:30:10 (மத்திய அரசு, மாநில அரசு, தொண்டு நிறுவனம்) என்ற நிதி பகிர்வின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 2018–2019 ஆம் ஆண்டில் ₹1288.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.22 தேசிய ஊட்டச்சத்துக் குழுமம்**

2017–2018 ஆம் ஆண்டிலிருந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இந்தியாவில் பிறந்தது முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து நிலையை

முன்னேற்றுவதற்கான குறிக்கோளுடன் தேசிய ஊட்டச்சத்துக் குழுமம் ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது. தேசிய ஊட்டச்சத்துக் குழுமம், ஊட்டச்சத்து குறித்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் தலைமை அமைப்பாக செயல்படும். இக்குழுமத்தின் நோக்கம் நாட்டிலுள்ள ஊட்டச்சத்து குறைபாட்டினை, வாழ்க்கை சுழற்சி முறையில் ஒருங்கிணைந்த இலக்கு சார்ந்த அணுகுமுறைகளை அடிப்படையாக கொண்டு படிப்படியாக குறைப்பதாகும். இக்குழுமம் உரிய நேரத்தில் சேவை வழங்குவதற்கான வழிமுறைகளுடன் வலுவான கண்காணிப்பு மற்றும் உள்கட்டமைப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும்.

தேசிய ஊட்டச்சத்து குழுமம் படிப்படியாக நாடு முழுவதும் நடைமுறைபடுத்தப்பட உள்ளது. இந்திய அரசு தமிழகத்தில் முதற்கட்டத்தில் **5** மாவட்டங்களையும், இரண்டாவது கட்டத்தில் **6** மாவட்டங்களையும் திட்டத்தினை செயல்படுத்த தேர்வு செய்துள்ளது. (அரியலூர், நீலகிரி, விழுப்புரம், திண்டுக்கல், சென்னை, திருநெல்வேலி, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி)

### 4.22.1 தேசிய ஊட்டச்சத்து குழுமத்தின் இலக்குகள்

| வ. எண் | நோக்கங்கள் | இலக்கு |
|---|---|---|
| 1. | பிறந்தது முதல் 6 வயது குழந்தைகளிடையே குள்ளத் தன்மையை குறைத்தல் மற்றும் தடுத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 2% வீதம் 6% குறைத்தல் |
| 2. | பிறந்தது முதல் 6 வயது குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு (எடை குறைவு) குறைத்தல் மற்றும் தடுத்தல். | ஒவ்வொரு ஆண்டும் 2% வீதம் 6% குறைத்தல் |
| 3. | 6 முதல் 59 மாதங்கள் வரையிலான குழந்தைகளிடையே காணப்படும் இரத்தசோகையினை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 3% வீதம் 9 % குறைத்தல் |
| 4. | 15 முதல் 49 வயதில் உள்ள வளரிளம் பெண்கள் மற்றும் பெண்களிடையே காணப்படும் இரத்தசோகையினை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 3% வீதம் 9 % குறைத்தல் |
| 5. | குறைந்த எடையுடன் குழந்தைகள் பிறப்பதை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 2% வீதம் 6 % குறைத்தல் |

### 4.22.2 நிதி பங்கீடு முறை

தேசிய ஊட்டச்சத்துக் குழுமம் பிற நிறுவன நிதி உதவியுடன் செயல்படும் ஒரு திட்டம். இத்திட்டத்திற்கான நிதியில் அரசு வரவு செலவு (Budgetary Support) பங்கீடு 50% மற்றும் பன்னாட்டு மறுகட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின்

(IBRD) அல்லது பன்முக அபிவிருத்தி வங்கியின் (MDBs) பங்கீடு **50%** ஆகும்.

| **பன்னாட்டு மறுகட்டமைப்பு மேம்பாட்டு வங்கி (IBRD) / பன்முக அபிவிருத்தி வங்கி (MDBs) லிருந்து பெறப்படும் நிதி (சதவிகிதம்)** | **மத்திய அரசிலிருந்து பெறப்படும் நிதி (சதவிகிதம்)** | **மாநில அரசிலிருந்து பெறப்படும் நிதி (சதவிகிதம்)** |
|---|---|---|
| 50% | 30% | 20% |

### 4.22.3 தேசிய ஊட்டச்சத்துக் குழுமத்தின் மூன்று முக்கிய அம்சங்கள்

#### 1. ஒருங்கிணைப்பு

மாநில அரசு மற்றும் தொடர்புடைய அமைச்சகங்கள் (line Ministries) சமூகத்திற்கான நலத் திட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை, சுகாதாரம், குடிநீர் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம், ஊரக வளர்ச்சித் துறை, பஞ்சாயத்து ராஜ், கல்வி, உணவு மற்றும் இதர தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும். கர்ப்ப கால வளர்ச்சி நிலைகள் மற்றும் குழந்தை பிறந்த முதல் **1,000** நாட்கள் மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலம் (PMMVY,ANC,PNC,ASHA/AWW/Vaccination)

பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய நாட்களில் தாய்மார்களுக்கு வழங்கப்படும் ஆதரவு போன்றவற்றை ஒருங்கிணைந்து செயல்படுதலை உறுதி செய்தல்.

## 2. ICDS-பொதுவான மென்பொருள் பயன்பாடு (Common Application Software)

முழு நேர கண்காணிப்பிற்காக அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு திறன்பேசி (Smartphone) வழங்கப்பட உள்ளது. அங்கன்வாடி பணியாளர்கள் பயன்படுத்தும் 11 பதிவேடுகளில், 10 பதிவேடுகள் திறன்பேசி செயலி மூலம் எண்முறைப்படுத்தப்பட்டு (Digitize) பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை தொடர் கண்காணிப்பின் மூலமாக மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

## 3. சமுதாய அணித்திரட்டல் மற்றும் தொடர்பு பணிகள் மூலம் பழக்க வழக்க மாற்றம் (BCC)

பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் தாய் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து குறித்த மாறுதல் ஏற்படுத்தப்படுகிறது. தகவல், கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் திட்டங்கள் குறித்த தகவல்கள் தெரிவிக்கப்படும்.

இந்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி மாநில அரசு / மாவட்டம் / வட்டாரம் போன்ற மண்டலங்களை ஒருங்கிணைத்து திட்டக் குழுக்களை அமைத்து தேவையான உள்ளீடுகளைக் கண்டறிந்து குறைகளை நிவர்த்தி செய்தல்.

**இத்திட்ட செயல்பாட்டிற்காக 2018–2019ஆம் ஆண்டில் ₹1,633 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.23 பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா**

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலைமையினை மேம்படுத்துவதற்காக பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (முன்னர் இந்திரா காந்தி மகப்பேறு நிதி உதவி திட்டம்) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் வாயிலாக கர்ப்பிணி / பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு முன்னோடி திட்டமாக **2010–2011** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டமானது, தமிழகத்தில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி திட்டத்துடன் இணைந்து கடலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் **60:40** (மத்திய

அரசு:மாநில அரசு) நிதி பங்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டது. தற்போது மத்திய அரசு 01.01.2017 முதல் இந்த மகப்பேறு நல நிதி உதவி திட்டத்தினை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நல துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**4.24 பயிற்சி**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பயிற்சி என்பது முக்கிய அடிப்படை அம்சமாக உள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட சேவைகளை திறமையாகவும், தரமாகவும், மேம்படுத்தப்பட்ட வகையிலும் வழங்கி திட்டப்பணிகளின் நோக்கத்தை அடைவது என்பது திட்டத்தினை களத்தில் முன்னெடுத்து செல்லும் களப்பணியாளர்களின் செயல் திறனைப் பொறுத்து உள்ளது.

தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட, தனித்துவம் வாய்ந்த, மூன்றடுக்கு பயிற்சி முறை அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. திறன் மிக்க, செலவு குறைவான, பொருளாதார பயன் நிரம்பிய, இப்பயிற்சி முறை பல தரப்பாலும் சிறப்பாக பாராட்டப்படும் முறையாக உள்ளது. பயிற்சிகள் அளிக்கப்படும் போதும்,

மேற்பார்வையாளர்களின் களப்பணியின் போதும், பயிற்சி மதிப்பீடுகள் உடனுக்குடன் செய்யப்பட்டு தேவையான உரிய வழிகாட்டுதல்கள் அவ்வப்போது களத்தில் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு வட்டாரத்திலும் களப்பணியாளர்களுக்கு பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதற்கு ஒரு பயிற்றுனர் பணிபுரிந்து வருகிறார். மாநில அளவில், இடைநிலை அளவில் மற்றும் திட்ட அளவில், பல்வகை பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் விபரம்:–

| வ. எண். | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியின் பெயர் | பயிற்சி பெறுபவர்கள் |
|---|---|---|---|
| 1. | மாநில பயிற்சி மையம், தரமணி, சென்னை–113. | பணிப்பயிற்சி மற்றும் புத்தாக்கப்பயிற்சி | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் |
| 2. | | பணிப்பயிற்சி/ புத்தறிவுப் பயிற்சி மற்றும் புத்தாக்கப்பயிற்சி | அங்கன்வாடி பயிற்சி மைய பயிற்றுநர்கள் (மேற்பார்வையாளர்கள் நிலை–I) |
| 3. | இடைநிலை பயிற்சி மையம், இந்திய குழந்தைகள் நலச் சங்கம், சென்னை. | பணிப் பயிற்சி/ புத்தாக்கப் பயிற்சி | மேற்பார்வையாளர் நிலை –II |
| 4. | மாவட்டங்களில் உள்ள வட்டாரங்களில், திட்ட அளவிலான பயிற்சி | பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி | அங்கன்வாடி பணியாளர்கள் |
| 5. | | பணிப் பயிற்சி/புத்தறிவுப் பயிற்சிமற்றும் புத்தாக்கப்பயிற்சி | அங்கன்வாடி உதவியாளர்கள் |

மேற்கண்ட வழக்கமான பயிற்சிகள் தவிர “பிற பயிற்சி” என்கிற பிரிவின் கீழ் மாநில அளவில் தேவைக்கேற்ப குறிப்பிட்ட தலைப்புகளில், பயிற்சித் திட்டங்களை கண்டறிந்து, வடிவமைத்து பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மாநில பயிற்சி மையத்திற்கு திட்டப்பகுதிகளில் சூழ்நிலைக்கேற்ப புதிய முயற்சிகளை கையாளுதலுக்கென அதிக கவனம், முக்கியத்துவம் மற்றும் புதிய முயற்சிகள் மேற்கொள்ள 25% பயிற்சிதிட்டத்தினை மாற்றியமைத்திட வழிவகை உள்ளது. வாழ்க்கை–வேலை இரண்டிற்கும் இடையே சமநிலையை உறுதி செய்தல் போன்றவற்றில் திறன் மிக்கவர்களாக களப்பணியாளர்களை உருவாக்கிட உளவியல் முன்னேற்றம், மனஅழுத்தத்தைக் கையாளுதல், யோகா போன்ற பயிற்சிகள் களப்பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில், இந்தியாவிலேயே முதன்முறையாக நிப்சிட் (NIPCCD) உடன் இணைந்து குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கு பணிப்பயிற்சி **கணிணி மூலம்** வழங்கப்பட்டது.

சமுதாயத்தில் குழந்தை பராமரிப்பு முறைகளை அவர்களின் பங்களிப்புடன் மேம்படுத்துதல்,

பிறதுறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல் போன்றவற்றில் களப்பணியாளர்களின் செயல்திறன்களைப் பொறுத்தே, திட்டத்தின் நோக்கமும்/இலக்குகளும் அடைய வேண்டிய சாதனைகளை எளிதில் அடையும் என்பதால், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சி என்பது மிகவும் முக்கியமான பிரிவாக உள்ளது.

**இதற்காக 2018–2019ஆம் வருடத்திற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ₹383.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.24.1 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட களப்பணியாளர்களுக்கான பச்சிளம் குழந்தை மற்றும் இளஞ்சிறார்களுக்கான உணவூட்டுதல் பயிற்சி (IYCF)

சீம்பாலின் முக்கியத்துவம் மற்றும் தாய்ப்பால் ஊட்டுதல், ஐந்து வயதிற்குட்பட்ட இளம் குழந்தைகளுக்கு இணை உணவு ஊட்டுதல், தாய் சேய் நல அட்டை குறித்த பச்சிளம் குழந்தை மற்றும் இளஞ்சிறார் உணவூட்டுதல் பயிற்சியினை (IYCF) களப்பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த மற்றும் விரிவான முறையில் அளிப்பதன் மூலம் திட்டத்தில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஊட்டசத்து குறைபாட்டினால் இறப்பதைத் தவிர்க்கப்படுகிறது. இப்பயிற்சி குழந்தை வளர்ச்சி திட்ட

அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## 4.25 தகவல், கல்வி, தொடர்பு பணிகள் – விழிப்புணர்வு செயல்பாடுகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில், ஊட்டச்சத்து, சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, வளர்இளம் பெண்கள் மற்றும் பெண்கள் மேம்பாடு குறித்து தாய்மார்கள், வளர் இளம் பெண்கள் மற்றும் சமுதாயத்திடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள் குறித்து , அவர்களுடைய மனப்பான்மை மற்றும் பழக்க வழக்கங்களில் தேவையான மனமாற்றத்தைக் கொண்டு வர பல்வேறான தகவல், கல்வி, தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கர்ப்பக்காலம் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பராமரிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், சமுதாய பங்கேற்பை அதிகப்படுத்தவும் கர்ப்பிணி பெண்களுக்கு “**சமுதாய வளைகாப்பு**” **32** மாவட்டங்களை

சார்ந்த **434** திட்டத்தில் உள்ள **1,782** தொகுதிகளிலும் சிறப்பாக நடத்தப்படுகிறது.

இவ்விழாவில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மருத்துவப் பரிசோதனை, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனை, கர்ப்பக் கால பராமரிப்பு, தாய்ப்பாலின் அவசியம், பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள் (Infant and Young Child Feeding Practices) குழந்தை வளர்ப்பு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் குறித்து விழிப்புணர்வும், கல்வியும் அந்தந்தத் துறை வல்லுநர்களால் வழங்கப்படுகிறது.

பயனாளிகள், இணை உணவை வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் விவரத்தை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களே வந்து இணை உணவை கேட்டு பெறும் நிலையை ஏற்படுத்தவும், சமுதாயத்தினருக்கு இதில் உள்ள பொறுப்பை உறுதி செய்யவும் , ஒவ்வொரு அங்கன்வாடி மைய வெளிப்புற சுவர்களிலும் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் இணை உணவின் விவரம் அளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் மூலம் வழங்கப்படும் சேவைகள் குறித்த தகவல்கள் குறு விளம்பரங்களாக (JINGLES) அகில இந்திய வானொலி

மற்றும் தொலைக்காட்சி மூலம் தமிழ்நாடு முழுவதும் மக்களை சென்றடைந்திடும் வண்ணம் ஒளிபரப்பப்படுகிறது.

மக்களிடையே பழக்க வழக்கங்களில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி மற்றும் வளரிளம் பெண்கள் முன்னேற்றம் குறித்த சுவரொட்டி, மடிப்புத்தாள் போன்ற பல்வேறான தகவல் தொடர்பு சாதனங்கள் வடிவமைக்கப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்படுகிறது.

### 4.26 கண்காணித்தல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட செயல்பாடுகளை கண்காணித்திடவும், ஆய்வு செய்திடவும் பல்வேறு நிலைகளில் கண்காணிப்பு குழுக்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

1. **மாநில அளவிலான கண்காணிப்பு மற்றும் ஆய்வு குழு :–** அரசு தலைமைச் செயலரை தலைவராக கொண்டு ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது தேவை ஏற்படும் போது இக்குழு கூடும். பெண்கள், குழந்தைகள் தொடர்புடைய கல்வி, சுகாதாரம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி குறித்து ஆய்வு செய்வது மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் ஆண்டு வரைவு திட்டத்தினை செயல்படுத்துதல், இக்குழுவின் பணிகளாகும்.

2. **மாவட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் ஆய்வு குழு :–** சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை அல்லது தேவை அடிப்படையில் கூடும். மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி தொடர்பாக பயனாளிகளின் எண்ணிக்கை, குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை, இணை உணவின் தரம் மற்றும் சீரான விநியோகம், முன் பருவ கல்வி ஆகியவற்றை இக்குழு ஆய்வு செய்யும்.

3. **வட்டார அளவிலான கண்காணிப்பு குழு :–** துணை நிலை மாஜிஸ்ட்ரேட் / துணை ஆட்சியர் / வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில், இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடி, வட்டார அளவிலான பயனாளிகள் எண்ணிக்கை, இணை உணவின் தரம், குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை குறித்த அறிக்கையினை மாவட்ட கண்காணிப்பு மற்றும் ஆய்வு குழுவிற்கு அனுப்புவது இதன் பணி.

4. **அங்கன்வாடி அளவிலான கண்காணிப்பு மற்றும் உதவி குழு:–** குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்/ மேற்பார்வையாளர் நிலை–I இக்குழுவிற்கு தலைவர் ஆவர். இக்குழுவானது வழக்கமான மாதந்திர கூட்டம் ஏற்பாடு செய்து அங்கன்வாடி மைய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அவற்றை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்கும்.

**4.27 ஆதார் பதிவு**

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடையும் அனைத்து பயனாளிகளின் ஆதார் எண்கள் திட்டத்துடன் இணைத்திடும் பணி நடைபெற்று வருகிறது. குழந்தைகளுக்கான 100% ஆதார் எண் இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஆதார் சேர்க்கை பணியினை மேலும் துரிதப்படுத்தும் வகையில் 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களை நிரந்தர பதிவு மையங்களாக இயங்க மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பிறந்தது முதல் 5+ வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்க்கு ஆதார் எண் இணைப்பு பணிகளை மேற்கொள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் அவர்களை பதிவாளராக தகவல் தொழில் நுட்பத் துறையின் வரைமுறைகளுக்குட்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்திற்கென ₹1953.00 இலட்சம், 2018–2019 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.28 அங்கன்வாடி மைய ஊழியர்களின் நலன்

தமிழகத்தில் உள்ள **54,439** அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 7ஆவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | பதவி | 6வது ஊதியக்குழுவில் வழங்கப்பட்ட சிறப்பு கால முறை ஊதியம் | | | 7வது ஊதியக்குழுவின் படி தற்போது வழங்கப்படும் சிறப்பு கால முறை ஊதியம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஊதிய விகிதம் ₹ | பணியில் சேர்பவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் | பணியாளர் களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் | ஊதிய விகிதம் ₹ | முதன் முதலில் பணியில் சேர்பவர் களுக்கு வழங்கப் படும் ஊதியம் ₹ | பணியில் மூத்த பணியாளர்களுக்கு வழங்கப் படும் ஊதியம் ₹ |
| 1 | அ.வா.ப | 2500 – 5000 GP 500 | 7950 | 11798 | 7700 – 24200 | 10045 | 14350 |
| 2 | குறு அ.வா.ப | 1800 – 3300 GP 400 | 6038 | 6540 | 5700 – 18000 | 7945 | 8575 |
| 3 | அ.வா.உ | 1300 – 3000 GP 300 | 4604 | 6205 | 4100– 12500 | 6265 | 8260 |

7ஆவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் படி, அங்கன்வாடி பணியாளர்களில் தனி நபர் ஒருவருக்கு மாத ஊதியம் **₹2,095** முதல் **₹2,552** வரை கூடுதலாகவும், குறு அங்கன்வாடி பணியாளர்களில் தனி நபர் ஒருவருக்கு மாத

ஊதியம் ₹**1,907** முதல் ₹**2,035** வரை கூடுதலாகவும், அங்கன்வாடி உதவியாளர்களில் தனி நபர் ஒருவருக்கு மாத ஊதியம் ₹**1,661** முதல் ₹**2,055** வரை கூடுதலாகவும் பணப்பலன் பெறுகின்றனர்.

| வ. எண் | பதவி | 7 வது ஊதியக் குழவின்படி உயர்த்தப்பட்ட சிறப்பு கால முறை ஊதியம் | |
|---|---|---|---|
| | | குறைந்தபட்சமாக உயர்த்தப்பட்ட சிறப்பு கால முறை ஊதியம் ₹ | அதிகபட்சமாக உயர்த்தப்பட்ட சிறப்பு கால முறை ஊதியம் ₹ |
| 1 | அங்கன்வாடி பணியாளர் | 2,095 | 2,552 |
| 2 | குறு அங்கன்வாடி பணியாளர் | 1,907 | 2,035 |
| 3 | அங்கன்வாடி உதவியாளர் | 1,661 | 2,055 |

இது தவிர அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி, குளிர்காலபடி மற்றும் ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, ஒட்டுமொத்த ஓய்வு தொகையாக அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ₹**1,00,000**மும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ₹**50,000**மும் **01.10.2017** முதல் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து

ஓய்வுபெறும் போது **01.10.2017** முதல் மாதாந்திர சிறப்பு ஓய்வூதியமாக **₹2,000** வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு புடவைகள் சீருடையாக வழங்கப்படுகிறது. **2018** ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி ஊழியர்களுக்கு, கோடை விடுமுறையானது மே மாதம் இரண்டாவது வாரம் அங்கன்வாடி பணியாளர்களுக்கும், மூன்றாம் வாரம் அங்கன்வாடி உதவியாளர்களுக்கும், நான்காவது வாரம் குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பணிபுரியும் **98** அங்கன்வாடி பணியாளர்களுக்கு அவர்கள் சேவையை ஊக்கப்படுத்தும் விதமாக மாநில விருதாக தலா **₹10,000** ரொக்கப்பரிசும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

குழும இயக்ககம் அனைத்து நிலைகளிலும் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாய பங்களிப்புடன், அனைத்து நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளை சென்றடைந்திடும் வகையில் செயல்படுகிறது.

******

## அத்தியாயம் 5
## சமூகப் பாதுகாப்பு

**5.1** தமிழக அரசு, குழந்தைகள் மற்றும் மகளிருக்கான நலத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில் நாட்டிலேயே, எப்பொழுதும் முன்னிலை வகித்து வருகிறது. குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள், வளர்ச்சி, நலம் பேணுதல், மறுவாழ்வு மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பிற்கு தேவைப்படும் அனைத்து சேவைகளையும் குழந்தை நேய அணுகுமுறையுடன் வழங்கி, அவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்யும் கட்டமைப்பை உருவாக்குவதை தற்போது நடைமுறையில் உள்ள இளைஞர் நீதிச் சட்டம், 2015 நோக்கமாக கொண்டுள்ளது. சமூகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு தேவையான அதிகபட்ச வாய்ப்புக்களை அளிப்பதற்காக தமிழக அரசு, இளைஞர் நீதிச் சட்டத்தை மாநிலத்தில் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இடர்பாடான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட, பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1887ஆம் ஆண்டிலேயே சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகளை நிறுவியும், மேலும், குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும், அதற்கான

நிறுவனங்களின் செயல்பாட்டிற்காகவும் 1920ஆம் ஆண்டில், 'மெட்ராஸ் குழந்தைகள் சட்டத்தினை' இயற்றியதன் மூலமும் குழந்தைப் பாதுகாப்பு செயலமைவுத் திட்டத்தினை உருவாக்குவதில் தமிழகம் முன்னோடியாக திகழ்கின்றது.

இளைஞர் நீதிச் சட்டம் 2015ல் வகுக்கப்பட்டுள்ள அனைத்து சட்ட ரீதியான அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய ஒரு ஆற்றல் வாய்ந்த அமைப்பினை உருவாக்கி பராமரிப்பதன் மூலம் சமூகப் பாதுகாப்புத் துறை இளைஞர் நீதிச் சட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களான குழந்தைகள் இல்லங்கள் / வரவேற்பு இல்லங்கள், அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழ் இயங்கி வருகின்றன. கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் ஆகியவை அரசால் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தில் இயங்கி வரும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு செய்வதன் மூலம் அங்கு தரமான சேவைகள் வழங்கப்படுவதையும் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் என்ற ஒரு குடையின் கீழ் "குழந்தைப் பாதுகாப்புச் சேவைகளை" சமூகப் பாதுகாப்புத் துறை மாநிலத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநில மற்றும் மாவட்ட அளவில் போதுமான சேவை வழங்கும் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான சேவைகளை ஒருங்கிணைத்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் திறன் வாய்ந்த அமைப்பை ஏற்படுத்துவதில் இத்திட்டத்தின் செயலாக்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

**1956**ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் மீட்கப்படும் பெண் குழந்தைகள் / பெண்களின் நலனுக்கான சேவைகளையும் இத்துறை வழங்கி வருகிறது. இப்பெண்களின் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக இச்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு மகளிர் விழிப்புப்பணி இல்லங்கள்/பாதுகாப்பு இல்லங்களை இத்துறை நடத்தி வருகின்றது.

## 5.2 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்

**2015**ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **18** வயதிற்கு உட்பட்ட

குழந்தைகளின் உரிமைகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் அரவணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. இச்சட்டம் பரந்த அளவில் குழந்தைகளை இரண்டு வெவ்வேறு பிரிவுகளாக வகைப்படுத்துகிறது (i) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள், (ii) சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள். மேலும், குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, மறுவாழ்வு மற்றும் சமூக ஒன்றிணைப்பு ஆகியவற்றிக்கும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

## 5.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்

வீடு அல்லது தங்குமிடம் இல்லாத மற்றும் அத்தகைய தங்குமிடத்தை பெற இயலாத, குழந்தைகள், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் எனப்படுவர். பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இல்லாத அல்லது உற்றார் உறவினர் எவரும் இல்லாத குழந்தைகள், தெருவோர குழந்தைகள், பணிபுரியும் குழந்தைகள், தவறாகப் பயன்படுத்தப்பட்ட, கொடுமைப்படுத்தப்பட்ட, சுரண்டலுக்கு உள்ளான, எளிதில் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய குழந்தைகள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் பிரிவின் கீழ் அடங்குவர்.

### 5.3.1 குழந்தை நலக் குழுக்கள்

**2015**ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கு தமிழக அரசு மாநிலத்தின் **32** மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்களை நிறுவியுள்ளது. **1973**ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதிகளின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஆகியோரின் அமர்வுக்கு உள்ள அதிகாரத்துடன் குழந்தை நலக் குழுக்களும் ஓர் அமர்வாக செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழந்தை நலக் குழுவும் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டதாகும் (ஒரு பெண் உறுப்பினர் உள்ளடக்கியது).

குழந்தை நலக் குழுவில் நடைமுறைகள் குழந்தைகளின் அதிகபட்ச நலனை முன்னிட்டு குழந்தை நேய சூழலுடன் நடத்தப்பட்டு வருகிறது.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹484.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.2 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் குழந்தைகள் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது, **36** குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், **152** குழந்தைகள் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றன. இதில் மன நலம் குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென **5** இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. குழந்தை பாதுகாப்புச் சேவைகள் வழிகாட்டியின்படி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் பராமரிப்பு மானியம் **₹2,000** லிருந்து **₹2,160** ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **2015**ன் கீழ் பதிவு பெற்ற **1,113** குழந்தைகள் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் தங்களது சொந்த ஆதாரத்தின் பேரில் நடத்தப்பட்டு வருகின்றன. குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை உறுதி செய்ய வேண்டி உணவு, உடை, உறைவிடம், மருத்துவ உதவி, கல்வி, தொழிற்கல்வி

போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன. இக்குழந்தைகள் இல்லங்களில் மொத்தம் **69,850** குழந்தைகள் உள்ளனர்.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹10,726 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.3 நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் அனைத்து குழந்தைகள் அதாவது பிச்சை எடுக்கும் சிறார்கள், தெருவோர மற்றும் பணிபுரியும் சிறார்கள், குப்பை பொறுக்கும் சிறார்கள், அனாதை, கைவிடப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட குழந்தைகள் குறிப்பாக வீடு மற்றும் குடும்ப உறவுகள் இல்லாத, துயருறும் சூழலில் உள்ள மற்றும் சுரண்டலுக்கு உள்ளாகக் கூடிய பாலியல் தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் நடைபாதையில் வசிப்பவர்களின் குழந்தைகளின் தேவைகளை நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் சிறார்களுக்கான திறந்தவெளிப் புகலிடங்கள் பூர்த்தி செய்யும். இந்த திறந்தவெளிப் புகலிடங்கள் குழந்தைகளுக்கு நிரந்தரமாக தங்கும் வசதிகளை

வழங்குவதற்காக அல்லாமல், குறுகிய கால பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும். தற்போது, தமிழ்நாட்டில் 12 திறந்தவெளிப் புகலிடங்கள் (சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தலா ஒன்று மற்றும் சென்னையில் 8 இடங்கள்) செயல்பட்டு வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ₹2,160 வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் குழந்தைப் பாதுகாப்புச் சேவைகளின் கீழ் உதவி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2017-2018ஆம் ஆண்டில், 325 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹265.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4 சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று, பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணானச் செயல்களைச்

செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள் ‘சட்டத்துக்கு முரணாகச் செயல்பட்ட குழந்தைகள்’ எனப்படுவர்.

### 5.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக தமிழக அரசு மாநிலத்தின் 32 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவியுள்ளது. இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியில் அனுபவமுள்ள உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர்) ஆகியோரைக் கொண்டு செயல்படுகிறது. இளைஞர் நீதிக் குழும நடைமுறைகளும் குழந்தை நலக் குழு நடைமுறைகள் போன்றே ஒரு நீதிமன்றம் நடப்பது போன்ற தோற்றம் இல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தைநேய சூழலுடன் நடத்தப்படுகிறது.

திருநெல்வேலி, அரசினர் கூர்நோக்கு இல்ல குழந்தைகளை வழக்குகள் விசாரணைக்காக அவ்வப்போது சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு அழைத்து செல்வதை

தடுக்கவும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் 2016–2017ஆம் ஆண்டில், திருநெல்வேலி, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் மேற்குறிப்பிட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடைய காணொலிக் காட்சி வசதி ₹38.91 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2017–2018 ஆம் ஆண்டில் இவ்வசதி நீட்டிக்கப்பட்டு சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடைய காணொலிக் காட்சி வசதி ₹49.72 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹260.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.2 கூர்நோக்கு இல்லங்கள்

கூர்நோக்கு இல்லங்கள் என்பது சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் விசாரணை மேற்கொள்ளப்படும் காலங்களில் தற்காலிகமாக தங்கவைப்பதற்கான இடம் ஆகும்.

தமிழ்நாட்டில் தற்போது அரசால் 9 கூர்நோக்கு இல்லங்கள் நேரடியாக நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மதுரை அரசு கூர்நோக்கு இல்லத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் முறைசாராக் கல்வி ஆகியவற்றோடு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதலும் வழங்கப்படுகின்றன. மேலும், இக்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் அவர்களை உன்னிப்பாக கண்காணிப்புச் செய்வதற்கு ஏதுவாகவும் அரசினர் கூர்நோக்கு இல்லங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வில்லச் சிறார்களுக்கு பயிற்சி பெற்ற ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் ஆற்றுப்படுத்தும் சேவை வழங்கப்பட்டு வருகின்றது. இச்சிறார்களின் திறமைகளை மேம்படுத்த தொழிற்பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹482.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.3 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

தவறிழைத்ததாக கருதப்படும் சிறார்கள் உரிய விசாரணைக்குபின் இளைஞர் நீதிக் குழுமத்தால் குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் என தீர்மானிக்கப்படும் நேர்வில் அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கும் பொருட்டு சிறப்பு இல்லங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சிறார்கள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்கலாம். சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் இயங்கி வருகின்றன. இவர்களது சுயசார்பிற்கான திறன்களை வளர்க்க, இவர்களுக்கு, இவ்வில்லங்களில் கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணைக் கல்வி செயல்பாடுகள், போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மற்றும் உன்னிப்பாக கண்காணிக்கவும், அரசினர் சிறப்பு இல்லங்களுக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹236.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.5 வள மையங்கள்**

வள மையங்கள், பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகளின் வழக்குகள் முறையே குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் விசாரணைக்குட்படும் போது அக்குழந்தைகளுக்கு சமூக உளவியல் ரீதியான உதவிகளும், வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகின்றன. கண்காணிப்பாளர் மூலம் பரிந்துரைக்கப்படும், நிறுவனங்களில் உறையும் சிறார்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களின் உளவியல் ரீதியான தேவைகளையும் இவ்வளமையங்கள் பூர்த்தி செய்கின்றன. தமிழ்நாட்டில், 14 வள மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹7.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.6 குழந்தைகளுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை**

உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை, கூர்நோக்கு இல்லம் மற்றும் சிறப்பு இல்லங்களில்

அனுமதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானதாகும். இளைஞர் நீதிக் குழுமம் மூலம் குற்றம் இழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் கூர்நோக்கு இல்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். பிணையில் விடுவிக்காத நிலையில் கூர்நோக்கு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறார்கள் மற்றும் அதே போன்று இளைஞர் நீதிக் குழுமத்தால் குற்றச் செயல்கள் உறுதி செய்யப்பட்டு சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படும் சிறார்கள் குடிப்பழக்கத்திலிருந்து விலகியதன் தாக்கத்தால் அவ்வப்போது உளவியல் ரீதியான உணர்வுப் பூர்வமான மற்றும் ஆக்ரோஷமான விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்விதமான உளவியல் தாக்கத்திலிருந்து விடுபடவும் நிறுவன சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயல்பட அவர்களுக்கு உதவும் பொருட்டு இவ்வில்லச் சிறார்களுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் ஆற்றுப்படுத்தல் சேவை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக உளவியல் நிபுணர்கள் மூலம் ஒரு நாளைக்கு ஒரு உளவியலாளருக்கு ₹1,000 மதிப்பூதியத்தில் குழந்தைகளுக்கு வருடத்தில் 180 நாட்களுக்கு ஆற்றுபடுத்துல் சேவை வழங்கப்படுகிறது.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹21.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.7 பாதுகாப்பான இடம்**

பாதுகாப்பான இடம் என்பது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட வயதில் கடுங்குற்றச் செயல்புரிந்த குழந்தைகள் மற்றும் 18 வயதிற்கு முன் செய்த குற்றத்திற்காக 18 வயது பூர்த்தி அடைந்த பின் விசாரணைக்கு உட்படுத்தப்படுபவர்களைத் தங்க வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதாகும். எனவே, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய விரிவான மறுவாழ்வுத் திட்டம் இப்பாதுகாப்பான இடத்திற்கு தேவை என்பது அவசியமாகிறது. வேலூரில் செயல்பட்டு வந்த வரவேற்பு இல்ல கட்டடத்தை பழுதுபார்த்து, சீரமைத்து மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்கு ₹42.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**5.8. இளைஞர் நீதி நிதி**

2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள,

தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி ₹25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அவசர தேவைகள் மற்றும் துறையின் திட்டத்தின் கீழ் வராத ஏனைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.

### 5.9 பள்ளிக் குழந்தைகளுக்கான தற்கொலைத் தடுப்புத் திட்டம்

தற்காலத்தில், மாணவர்களிடையே நிலவும் மிகப் பெரிய மனநிலைப் பிரச்சினையாக தற்கொலை உள்ளதால் அதை தடுப்பதற்கான உத்திகள் மேற்கொள்வது அவசர தேவையாகவுள்ளது. குழந்தைகள் குறிப்பாக தங்களது பள்ளி இறுதித் தேர்வுக்கு முன்னரும் பின்னரும் மற்றும் தேர்வு முடிவு வெளியான பின்னரும் பல்வேறுவிதமான மனஉளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை எண்ணத்திற்கு உந்தப்படுவதை தவிர்த்திடும் பொருட்டு அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் தற்கொலைத் தடுப்பு திட்டங்களை ₹15.04 இலட்சம் செலவில் சமூகப் பாதுகாப்புத் துறை நடத்தியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிகளில் உள்ள 100 ஆசிரியர்களுக்கு 'பயிற்றுனர்களுக்கான பயிற்று திட்டங்களை' அதற்கென நிபுணத்துவம் வாய்ந்த மனநல வல்லுநர்களுடன் இணைந்து வழங்குவதே இத்திட்டத்தின்

நோக்கமாகும்.

## 5.10 குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம்

போதைப் பழக்கத்திற்கு அடிமையாக உள்ள சிறுவர்களின் நலனை கருத்திற் கொண்டு அவர்களுக்கு சிகிச்சை வழங்க வேண்டி தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் போதை தடுப்பு மையம் அமைக்க ₹22.99 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. குறிப்பாக குற்றப் பின்னணி உடைய சிறுவர்களிடையே உள்ள போதைப் பழக்கத்தினை தடுத்து தீர்வு காண வேண்டியே இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. இளைஞர் நீதிக் குழுமம் இச்சிகிச்சை மையத்திற்கு சிறார்களை பரிந்துரை செய்யும். இத்திட்டத்திற்கான முழு நிதியும் மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது.

## 5.11 சேலம், அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

சேலம், அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம் தற்போது ஒரு பழைய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் குழந்தைகளின் தினசரி தேவைகளை நிறைவேற்றுவதற்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை

உருவாக்க இயலவில்லை. எனவே, மேற்படி குழந்தைகள் இல்லத்தில் குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் தங்குவதற்கு தேவையான அனைத்து நவீன வசதிகளையும் மேம்படுத்துவதற்காக அரசு ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு **2017–2018**ஆம் ஆண்டில் ₹**9.46** கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### 5.12 சென்னை சிறுமியருக்கான அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

**2015**ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்படி, குற்றம் சாட்டப்பட்டதாக கருதப்படும் குழந்தைகள், அவர்களது வயது மற்றும் குற்றத்தின் தன்மைக்கேற்ப கூர்நோக்கு இல்லங்களில் தங்க வைக்கப்பட வேண்டும். எனவே, குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அவர்களை தனித்தனியாக தங்கவைத்து பராமரிக்கப்பட வேண்டியதை கருத்திற் கொண்டு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு **2017–2018**ஆம் ஆண்டில் ₹**4.40** கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## 5.13 குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களிலுள்ள குழந்தைகளை “உளவியல் வாழ்வரங்கம்” மூலம் ஆக்கப்பூர்வமான குடிமக்களாக உருவாக்கும் திட்டம்

குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களிலுள்ள குழந்தைகளை “உளவியல் வாழ்வரங்கம்” மூலம் ஆக்கப்பூர்வமான குடிமக்களாக உருவாக்கும் திட்டத்திற்கு **2017–2018**ஆம் ஆண்டிற்கு **₹30.00** இலட்சம் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து குழந்தை நிறுவனப் பொறுப்பாளர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி இல்ல பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் வழி நடத்துனர்களுக்கு **6** மண்டல அளவிலான பயிற்சி வகுப்புகள் மற்றும் **30** உரையாடல் கூட வகுப்புகள் ஒரு உரையாடல் கூட வகுப்பில் **2** இல்ல பணியாளர்களுடன் நடந்து முடிவடைந்துள்ளன.

## 5.14 நன்னடத்தை அமைப்பு

இளைஞர் நீதிச் சட்டம் ஒரு சரியான அடிப்படையிலான அணுகுமுறையை முன் வைக்கிறது மற்றும் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் பங்களிப்புடன் விரைவான மறுவாழ்வு மற்றும் குடும்பத்தினருடன் குழந்தைகளைச் சேர்க்க நன்னடத்தை பணி ஒரு பயனுள்ள கருவியாக செயல்படுகிறது.

குழந்தையினை சமுதாயச் சூழலில் வளர்வதையே முக்கியமாக வலியுறுத்துவதோடு நிறுவனத்தில் குழந்தையை சேர்ப்பது என்பது கடைசி கட்ட முயற்சியாக இருத்தல் வேண்டும் என்பதையே இளைஞர் நீதிச் சட்டம் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் ஒரு மாவட்டத்திற்கு ஒரு நன்னடத்தை அலுவலர் வீதம் 32 மாவட்டங்களுக்கும், சென்னை மாவட்டத்திலுள்ள அதிகப்படியான வழக்குகளை கருத்தில் கொண்டு கூடுதலாக 3 நன்னடத்தை அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தை நலக் குழு மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் நிறுத்தப்படும் வழக்குகள் மீது சரியான முடிவு மேற்கொள்ள சமூக விசாரணை அறிக்கை தயாரிக்க நன்னடத்தை அலுவலர்கள் பணிக்கப்படுகின்றனர். ஒரு சில வழக்குகளில் தவறிழைத்ததாக கருதப்படும் சிறார்களை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் குழந்தைகள் இல்லங்களிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள் பிற்காப்பு நிலை அறிதல் போன்றவை நன்னடத்தை அலுவலர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நன்னடத்தை அலுவலர்களின் முக்கிய பங்கினை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு காலமுறை பயிற்சி,

அறிவுத்திறன் மேம்படுத்துதல், அவர்களின் பணியினை ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்ய வேண்டியதின் அவசியத்தினை உணர்ந்து அரசு 2017–2018ஆம் ஆண்டில் ஒரு முதன்மை நன்னடத்தை அலுவலரையும் மற்றும் இரு மண்டல நன்னடத்தை அலுவலர்கள் முறையே சென்னை மற்றும் மதுரையிலும் நியமித்துள்ளது. குழந்தைகளுக்கு முறையான மறுவாழ்வு நடவடிக்கைகளை விரைந்து வழங்குவதை உறுதி செய்ய வேண்டி சமூக பாதுகாப்புத் துறையில் உள்ள நன்னடத்தை பிரிவு அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வருகிறது. காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்து வரும் 35 நன்னடத்தை அலுவலர்கள் அல்லாமல் கூடுதலாக 24 சட்டம் சார்பு நன்னடத்தை அலுவலர்கள் குழந்தை நலக் குழு மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் அதிகப்படியான வழக்குகள் நிலுவையில் உள்ள மாவட்டங்களில் குழந்தைப் பாதுகாப்புச் சேவைகளின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**5.15 அரசினர் பிற்காப்பு நிறுவனங்கள்**

குழந்தைகள் இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடித்து (18 வயது முடிவுற்றபின்) தொடர்ந்து நிறுவன பராமரிப்பு தேவைப்படும் இளைஞர்கள் அவர்களது 21 வயது

நிறைவெய்தும் வரை பிற்காப்பு நிறுவனங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். பிற்காப்பு இல்லங்களில் பல்வேறு காரணங்களால் தன் குடும்பத்துடன் மீண்டும் சேர முடியாத இளைஞர்கள் அல்லது கல்வியைத் தொடரும் குழந்தைகள் அல்லது பயிற்சியை பெற்று கொண்டிருக்கும் குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இளைஞர்களுக்கான இரண்டு பிற்காப்பு நிறுவனங்கள் ஒன்று ஆத்தூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. பெண்களுக்காக வேலூரில் ஒரு பிற்காப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனங்கள் நடத்துவதற்காக கடந்த 2017–2018ஆம் ஆண்டில் ₹165.89 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இது தவிர வயது முதிர்ந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய புகலிடம் அரசு உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹155.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.16 குழந்தை தத்தெடுத்தல்

தத்தெடுத்தல் என்பது, பெற்றோர்களிடமிருந்து நிரந்தரமாக பிரிய நேரிட்ட ஒரு குழந்தை, தத்தெடுக்கும் பெற்றோரின் உறவு முறையோடு இணைந்து அனைத்து தார்மீக உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளோடு அவர்களது சட்டப்பூர்வமான குழந்தையாக மாறும் செயல்முறையை குறிப்பதாகும்.

சமூகத்தில் குடும்பம் ஒரு முக்கிய அங்கமாகும். குடும்ப சூழலில் வாழ்வது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமையாகும். ஏழ்மையான சமூக பொருளாதார நிலைகளின் காரணமாகவும், பிறழ்நீதி எண்ணங்களாலும், சமூகத்தில் சில குடும்பங்கள் சிதைகின்றன. இதனால் பெற்றோரில் சிலர் தாங்கள் பெற்ற குழந்தைகளை கைவிடுவதால், அக்குழந்தைகள் கைவிடப்படுதல், தவறாக பயன்படுத்துதல், புறக்கணிப்பு மற்றும் நிராதரவற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதன் விளைவாக இத்தகைய குழந்தைகள் தங்களது வாழ்வைக் குழந்தைகள் இல்லங்களில் கழிக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். குழந்தைகள் குடும்ப சூழ்நிலையில் பராமரிக்கப்படுவதே முதல்

தேர்வாகவும், காப்பகங்களில் வளர்வது கடைசி தேர்வாகவும் இருக்க வேண்டும் என்பதே அனைவராலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

மத்திய தத்து வள ஆதார மையம் (CARA) மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தன்னாட்சி நிறுவனமாக செயல்படுகிறது. மேலும், இந்திய குழந்தைகளை தத்து வழங்குவதற்கு ஒருங்கிணைப்பு அமைப்பாகவும் (Nodal Body) செயல்பட்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தலினை முறைப்படுத்தி மற்றும் கண்காணிக்கும் பணியையும் மத்திய தத்து வள ஆதார மையம் மேற்கொள்கிறது. இத்திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்தும் வகையில், உள்நாட்டு தத்தெடுத்தல் மற்றும் வெளிநாட்டு தத்தெடுத்தலை கண்காணிப்பதற்கு மாநில தத்து வள ஆதார மையம் (SARA) நிறுவப்பட்டுள்ளது.

குழந்தைகளின் நலன் கருதி அவர்களை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது தமிழக அரசின் தலையாய பொறுப்பாக உள்ளது. அதுவே, சமுதாயத்தில் கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, நிராதரவாக்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்தல் என இளைஞர் நீதிச் சட்டம் **2015–**இன்

கொள்கையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இளைஞர் நீதிச் சட்டம், 2015–இன் பிரிவு 56, அப்பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள், மத்திய தத்து வள ஆதார மையத்தால் உருவாக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகள் தத்து எடுத்தல் குறித்த நடைமுறைகளை தெரிவிக்கின்றன.

### 5.17 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 19 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேற்படி, நிறுவனங்கள் முறையே மதுரை (2), காஞ்சிபுரம் (3) சேலம், (2) மற்றும் அரியலூர், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன.

தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகள் மட்டுமல்லாது, குழந்தைகள் வழிமம் (Child Line), காவல்துறை, பொதுமக்கள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியன வாயிலாகவும் குழந்தைகள் பெறப்படுகின்றனர். பல்வேறு காரணங்களால் பெற்றோர்கள் நேரடியாக குழந்தைகளை குழந்தை நல குழுமத்தின் முன்

ஒப்படைக்கின்றனர். இந்தக் குழந்தைகள் தத்தெடுப்பு ஒழுங்குமுறை விதிகளின்படி பொருத்தமான குடும்பங்களுக்கு தத்து வழங்கப்படுகின்றனர். 1993 முதல் மார்ச் 2018 வரை இத்திட்டத்தில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம்:–

| வ. எண் | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | ஆண் குழந்தைகள் | பெண் குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | உள்நாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 1,248 | 3,813 | 5,061 |
| 2 | வெளிநாட்டில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | 98 | 367 | 465 |
| | **மொத்தம்** | **1,346** | **4,180** | **5,526** |

உள்நாடு மற்றும் வெளிநாட்டு தத்தெடுப்பை மேம்படுத்துவதற்காக குறிப்பாக தமிழக அரசால் மாநில தத்தெடுப்பு ஆலோசனை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் சட்டங்களின்படி, குழந்தைகள் சட்டபூர்வமாக உரிய நீதிமன்றங்களால் தத்து அளிக்கப்படுகின்றனர்:–

i. இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 (HAMA).

ii. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.

தத்தெடுப்பு தொடர்பான நடைமுறைகள் வெளிப்படையாகவும், எளிமையாகவும் அமையும் பொருட்டு அவை இணையதள வழியாக மேற்கொள்ளப்படுகிறது.

## 5.18 திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று குழந்தைகள் நலத் திட்டங்களைக் கண்காணிக்க யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் **1991**ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இப்பிரிவு மாநில அரசின் முழு நிதியுதவியின்படி செயல்படுகிறது. துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதோடு, அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் இல்லங்கள் அனைத்தையும் இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது. குழந்தைகள் நலத் திட்டங்களைக் காலமுறையாக ஆய்வு செய்து அறிக்கையினை வளர்ச்சிக்கான காரணிகளுடன் தெரிவிப்பது, இப்பிரிவின் கடமையாகும். இப்பிரிவு, துணை இயக்குநர் (கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு) தலைமையில் செயல்பட்டு வருகிறது.

## 5.19 அரசால் மேற்கொள்ளப்பட்ட பிறவகையிலான நடவடிக்கைகள்

### 5.19.1 கல்வி வசதிகள்

அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், குழந்தைகள் தன்னுரிமை மிக்கவர்களாக்க, அவர்களுக்கு கல்வி அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. மேல்படிப்பு படிப்பதற்கு விருப்பம் உள்ள குழந்தைகள் கல்வியைத் தொடர்வதற்காக வெளியிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

முறையான கல்வி வழங்குவதற்காக பெரும்பாலான அரசு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களான கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் முறைசாராக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹4.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.19.2 நவீன தொழிற்பயிற்சி**

துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் பயிற்சி பெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர் மூலம் தையல், மரவேலை மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற திறன் அடிப்படையிலான தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவைத் தவிர தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் குறுகிய கால தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:–

- பிளம்பிங் / எலக்ட்ரிக்கல் ஒயரிங்
- வீடியோகிராஃபி / புகைப்படம் எடுத்தல் / திரை அச்சடித்தல்
- ஆடை தயாரித்தல் / தையற்பயிற்சி
- புத்தகம் கட்டுதல்
- மென் பொம்மைகள் / காகிதப்பை / செயற்கை அணிகலன்கள் / சமையற் கலை / சுகாதார நாப்கின் தயாரித்தல் / கைவினைப் பொருட்கள்

- கணினிப் பயிற்சி
- அழகுக்கலைப் பயிற்சி
- உணவு தயாரித்தல் / பேக்கரி பொருட்கள் தயாரித்தல் / சமையல் பயிற்சி
- தண்ணீர் சுத்திகரிப்பான் பயிற்சி மற்றும் வீட்டு பொருட்கள் பழுதுபார்த்தல்



மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிதி உதவியுடன் தையல் இயந்திரம் இயக்குபவர், எலக்ட்ரீஷியன் உதவியாளர், பிளம்பர் உதவியாளர், ஏ.சி. பழுதுபார்த்தல், இருசக்கர வாகன பழுதுபார்த்தல் ஆகிய குறுகிய கால

பயிற்சிகளும் நடத்தப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் 175 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹38.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.20 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி உதவித்திட்டம் (Child line) 1098

துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது அவ்வகையான குழந்தைகளைக் காண நேரிடும் நபர், உடனடி உதவி பெற **1996**ஆம் ஆண்டு **சைல்ட் லைன் இந்தியா பவுண்டேசன்** என்ற அமைப்பினால், **(Childline India Foundation),** துவங்கப்பட்ட '**சைல்ட் லைன் –** என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவித் திட்டத்தின் மூலம் **24** மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். நாடு முழுவதும் இத்தொலைபேசி சேவைக்கான பொது எண்ணாக **'பத்து ஒன்பது எட்டு' (1098)** உள்ளது. இச்சேவை, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், இதற்கான நிதியுதவி இந்திய அரசினால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு

நிறுவனங்கள் மீட்பு மற்றும் தலையீட்டுச் சேவைகளை அளித்து வருகின்றன.

## 5.21 குழந்தைப் பாதுகாப்புச் சேவைகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் என்ற ஒரு குடையின் கீழ் "குழந்தைப் பாதுகாப்புச் சேவைகள்" மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படும் திட்டமாகும் மற்றும் குழந்தைப் பாதுகாப்பிற்காக மாநிலத்தில் இளைஞர் நீதி நிர்வாகத்தினை சிறப்பாக மேம்படுத்துவதற்கு தேவையான உரிய கட்டமைப்புகளை உருவாக்கி தமிழக அரசு இத்திட்டத்தை மாநிலத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அரசு மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு ஏற்படுத்த குழந்தைப் பாதுகாப்புச் சேவைகள் முனைந்துள்ளது.

இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் குழந்தைகள் தொடர்பான இதர சிறப்புச் சட்டங்களை செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகள் நலனுக்காக பங்களித்தலையும், சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, சுரண்டல்,

புறக்கணித்தல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:—

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.
- தற்போது இந்தியாவில் நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தைப் பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்.
- அனைத்து பிரிவுகளுக்கிடையே, எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்.

### 5.21.1 குழந்தைப் பாதுகாப்புச் சேவைகள் கீழ் செயல்படும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகள்

குழந்தைப் பாதுகாப்புச் சேவைகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

1. மாநிலக் குழந்தைப் பாதுகாப்புச் சங்கம்
2. மாவட்டக் குழந்தைப் பாதுகாப்புச் சங்கங்கள்/ அலகுகள்
3. மாநிலத் தத்தெடுப்பு வள முகமை அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சைல்ட் லைன் திட்டம் போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். குழந்தைப் பாதுகாப்புச்

சேவைகளின் கீழ் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாயிலாக சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹2240.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.22 அனைத்து குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களையும் 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்**

அனைத்து குழந்தை பராமரிப்பு இல்லங்களும், 2015ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்படாமலிருந்தால் சட்டப்படி அதற்கான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு குழந்தைப் பராமரிப்பு இல்லங்களைப் பதிவு செய்வதன் மூலம் அனைத்து இல்லங்களின் உண்மையான நிலை, அடிப்படை வசதிகள், போன்றவற்றை பகுப்பாய்வு செய்து அங்கு வழங்கப்படும் சேவைகளை நெறிமுறைப்படுத்த உதவிகரமாக உள்ளது.

மேலும், குழந்தைகள் இல்லங்கள் பதிவுச் செய்யப்படுவதன் மூலம் செயல்பட்டு வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்நிறுவனங்களில் உள்ளுறையும் குழந்தைகளின் எண்ணிக்கை குறித்த முழு தகவல் தரவு பெற உதவுகிறது. 2012ஆம் ஆண்டு முதல் மார்ச் 2018 வரையில், 1,301 இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் 876 இல்லங்கள் குறைந்தபட்ச தரம் / போதிய கட்டமைப்பு வசதி இல்லாததால் மூடப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டின் தமிழ்நாடு இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தரத்தைப் பூர்த்தி செய்யும் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களுக்கு மட்டுமே பதிவுகள் வழங்கப்படுகின்றன. எனவே, இச்சட்டத்தின்படி பதிவு செய்யப்படும் ஒவ்வொரு குழந்தைப் பராமரிப்பு நிறுவனமும் தேவையான குறைந்தபட்ச தரவுகளை உறுதி செய்கின்றது.

### 5.23 குழந்தைகளின் பின்தொடர் முறைமை

காணாமல் போன குழந்தைகளைக், கண்டறிவதும் அவர்களை அவர்களது பெற்றோர்கள் வசம் ஒப்படைப்பதும் ஒரு சவாலான பணியாக உள்ளது. இதனை

கருத்திற்கொண்டு மத்திய அரசு, குழந்தைகள் பின் தொடர்முறைமை என்ற தேசிய இணையதளத்தை (www.trackthemissingchild.gov.in) காணமால் போன மற்றும் கண்டறியப்பட்ட குழந்தைகள் விவரங்கள் அறிய தேசிய தகவல் மையம் (NIC) மூலம் அமைத்துள்ளது. மேற்படி இணையதளம் காணாமல் போன மற்றும் எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய குழந்தைகளுக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. பல்வேறு குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ளுறையும் குழந்தைகள் குறித்த தகவல் தொகுப்பினை இவ்வணைய தளம் கொண்டுள்ளது.

மாநிலத்தின் உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இடையே இணைப்பை ஏற்படுத்தியதன் மூலமும், பங்களிப்பினருக்கும், பணியாளர்களுக்கும் காலமுறையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டதின் மூலமும் தமிழ்நாட்டில் ‘‘குழந்தைப் பின்தொடர் முறைமை’’ சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமூகப் பாதுகாப்புத் துறை, “தேசிய தகவல் தளத்தில் காணாமல் போன குழந்தைகளின் தகவல்களைப் பதிவு செய்வதற்கான

மென்பொருள்களை உபயோகப்படுத்துதல்" குறித்தப் பயிற்சிகளை தேசிய தகவல் மையம் மூலம் குழந்தை பாதுகாப்பில் உள்ள பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது.

## 5.24 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம்

**1956**ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் சிறுமியர்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதைத் தடுத்தல், ஆள்கடத்தலில் ஈடுபடுபவர்கள், பாலியல் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துபவர்கள் மற்றும் பாலியல் தொழில் சந்தையை ஏற்படுத்துபவர்களை நீதியின் முன் நிறுத்துதல், பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பெண்கள், சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் குறித்து வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5.24.1 மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள்

**1956**ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் ஆள் கடத்துதலினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள

சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை அரசு நடத்தி வருகிறது.

ஒழுக்க அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட பெண்கள் 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டப் பிரிவுகளின் கீழ், நீதிமன்ற ஆணையின்படி இவ்வில்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இங்கு அவர்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம், மருத்துவ உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் அவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரும் பொருட்டு அவர்களின் விருப்பதிற்கு ஏற்ப பல்வேறு தொழிற்பயிற்சிகள் இவ்வில்லங்களில் வழங்கப்படுகின்றன.

நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு பதிலாக காணொலிக்காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள ஏதுவாக ₹20.00 இலட்சம் செலவில் மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும், சைதாப்பேட்டை முதன்மை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே, காணொலிக்காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 5.24.2 மீட்புப் புகலிடங்கள்

**1956**ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் குற்றங்கள் புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களது வழக்குகள் முடிக்கப்படும் வரை, தற்காலிகமாக இங்கு தங்க வைக்கப்படுகின்றனர். இந்தப் புகலிடங்கள், சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் பெண்கள் கண்காணிப்பு / பாதுகாப்பு இல்லங்கள் செயல்படுகின்றன. மேலும், வேலூர், பிற்காப்பு நிறுவன வளாகத்தில் ஒரு மீட்பு புகலிடம் இயங்கி வருகிறது. தற்போது மாநிலத்தில் **6** மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹365.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.24.3 பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நிதி உதவி

தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு நல நிதி தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் இல்லங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற

செலவினங்களை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்கள் சுயதொழில் தொடங்க ₹5,000 வரையிலான நிதியுதவி அல்லது தேவையான கருவிகள், மூலப்பொருட்கள் வாங்க ₹10,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

அதே போன்று, மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களிலிருந்து வெளியேறும் பெண்கள் மற்றும் சிறுமிகள் சுய தொழில் தொடங்க ₹5,000 வரையிலான நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### 5.24.4 வணிக ரீதியிலான பாலியல் சுரண்டலுக்காக மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கான புது முயற்சிகள்

கடத்தப்படுதல் மற்றும் வணிகரீதியிலான பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக தமிழக அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:–

- கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக மூன்றடுக்கு கண்காணிப்பு அமைப்பினை தோற்றுவித்ததில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது.

1. மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. ஒவ்வொரு கிராமங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுவது தொடர்பான பிரச்சனைகளைக் கண்காணிக்க கிராம ஊராட்சி தலைவர் தலைமையில் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- இதுதவிர, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட மேற்பார்வைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் / வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை மேற்பார்வையிடுகிறது.

- வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யவும், சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தால், அவர்களின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும் அதற்காக செயல்படும் அமைப்புகளுக்கு புத்தாக்க பயிற்சி இத்துறையின் மூலம் அவ்வப்போது அரசு மற்றும் யூனிசெஃப் போன்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

### 5.24.5 எளிதில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதிக்கான திட்டம்

கடத்துதலிலிருந்து மீட்கப்படும் பாதிக்கப்பட்ட மகளிருக்கு அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மறுவாழ்விற்கு நிதியுதவியாக ₹**10,000** பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதிக்கான திட்டத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் **2012**ஆம் ஆண்டு முதல் **31.03.2018** வரை **278** பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

## 5.25 'உஜ்ஜவாலா' திட்டம்

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் சுரண்டலுக்காக கடத்தப்படுவதென்பது அவர்களின்அடிப்படை உரிமைகள் மற்றும் மதிப்பினை உருக்குலைக்கும் குற்றமாகும். கடத்தலுக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு மிகுதியாக உள்ள பகுதிகள் மற்றும் கடத்தலுக்குள்ளாகக் கூடிய பிரிவினரிடையே கடத்தல் நிகழ்வுதலை தடுக்க பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தலை தடுக்க மாநில மற்றும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது, அவற்றுள் 'உஜ்ஜவாலா' திட்டமும் ஒன்றாகும். இவ்விரிவானத் திட்டம் ஆட்கடத்தலைத் தடுக்கவும், வணிக ரீதியான பாலியல்

சுரண்டலைத் தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வளித்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்கிறது. மத்திய, மாநில மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முறையே 60:30:10 என்ற நிதி பங்களிப்போடு மாநிலத்தில் இத்திட்டம் ஐந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2017–2018ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 149 பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹79.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.26 போதை தடுப்புத் திட்டம்

பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையே போதைப் பழக்கம் தொடர்பான பிரச்சனை, சமூக கலாச்சார காரணிகள், இணை நிலையினரின் தூண்டுதல் மற்றும் குடும்பத்தின் காரணமாக அதிகரித்து வருகிறது. குடி / போதை பழக்கத்திற்கு அடிமையாதல், தனிநபர்களுக்கு சொந்தமான வாழ்க்கையை மட்டும் அல்லாமல் அவரைச் சார்ந்த குடும்பம் மற்றும் சமுதாயத்தையும் பெரிதளவில்

பாதிக்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசின் நிதியுதவியுடன், போதைத் தடுப்புத் திட்டத்தை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. மாநிலத்தில் இத்திட்டத்தை அமல்படுத்துதல் மற்றும் கண்காணிக்கும் பணியினை சமூகப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சுமார் 21 நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் 23 மையங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இயங்கி வருகின்றன. கடந்த 2017–2018ஆம் ஆண்டில் இம்மையங்கள் மூலம் போதைப் பழக்கத்திற்கு அடிமையான 245 நபர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

## 5.27 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

குழந்தைகள் நலன் சார்ந்த சட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணிக்கவும், மீளாய்வு செய்யவும் மத்திய அரசின் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005 பிரிவு 17(1)–ன் படி தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டு

தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்டு கடந்த 18.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு, அரசு 2017–2018ஆம் ஆண்டில் ஒரு புதிய தலைவர் மற்றும் 6 புதிய உறுப்பினர்களை நியமனம் செய்துள்ளது.

இவ்வாணையம் 18.01.2013 முதல் 31.03.2018 முடிய பின்வரும் குழந்தைகள் உரிமைகள் தொடர்பான சட்டங்களின் கீழ் 1,318 வழக்குகளைக் கையாண்டு தீர்வு செய்துள்ளது:-

| | | |
|---|---|---|
| i) | இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 | 701 |
| ii) | குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 | 40 |
| iii) | குழந்தைகளின் கட்டாய மற்றும் இலவசக் கல்வி உரிமைச் சட்டம், 2009 | 262 |
| iv) | பாலியல் குற்றத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 | 304 |
| v) | குழந்தைத் தொழிலாளர் தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் சட்டம், 1986 | 11 |
| | **மொத்தம்** | **1,318** |

**2018–2019ஆம் நிதி ஆண்டில் ஆணையத்திற்கு ₹70.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.28 குழந்தைப் பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தை பாதுகாப்பு என்பது வன்முறை, சுரண்டல், தவறாக நடத்துதல் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பது ஆகும். குழந்தைகளின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையானது எந்நேரமும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதை வலியுறுத்துகிறது. குழந்தைப் பாதுகாப்பை உறுதிப்படுத்த குழந்தைப் பாதுகாப்புப் பணியில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் ஒன்றாக செயல்பட வேண்டியது அவசியமாகிறது. பல்வேறு துறைகளால் வழங்கப்படும் சேவைகளை ஒருங்கிணைக்க சமூகப் பாதுகாப்புத் துறை தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

சமூக நலம், சைல்ட் லைன், காவல், நீதி, மாற்றுத் திறனாளிகள் நலம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், தொழிலாளர் நலம், கல்வி, இரயில்வே காவல், வருவாய், அனைவருக்கும் கல்வித் திட்டம், ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி, நகராட்சி நிர்வாகம், மருத்துவ மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகள் மட்டுமின்றி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனும் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் சமூகப் பாதுகாப்புத் துறை செயல்பட்டு வருகின்றது.

குழந்தைப் பாதுகாப்புச் சேவைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்ய பல்வேறு துறை பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தியதன் மூலம் அரசு மாவட்ட அளவிலான கண்காணிப்பு அமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட அளவில் குழந்தைப் பாதுகாப்பிற்காக மாவட்ட நிர்வாக உதவியுடன் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு குழுக்களும் செயல்பாட்டில் உள்ளன. குழந்தைத் திருமணம், பாலியல் வன்கொடுமை, குழந்தைக் கடத்தல், சுரண்டல், பிச்சை எடுத்தல், குழந்தைத் தொழிலாளர் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தலிலிருந்து தடுப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் உணர்திறன் நிகழ்ச்சிகள் சமூகப் பாதுகாப்புத் துறையால் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டுள்ளன.

## 5.29 சமூகப் பாதுகாப்புத் துறைக்கான இணைய தளம் மற்றும் மின்னஞ்சல்

இணைய தள முகவரி **www.socialdefence.tn.gov.in**

மின்னஞ்சல் முகவரி : **dsd.tn@nic.in**

*******

## அத்தியாயம்–6

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

**6.1** தமிழ்நாட்டில் முதியோர் ஓய்வூதியத் திட்டம் கடந்த **1962** ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அரசாணை (நிலை) எண்.73, நிதித் துறை, நாள் **22.01.1962**–ன்படி முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு பின்னர் பல்வேறு காலகட்டங்களில் இத்திட்டம் ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட கைம்பெண்கள், விவசாய கூலிகள், **50** வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத முதிர்க்கன்னிகள் மற்றும் இலங்கை அகதிகள் என சமுதாயத்தில் நலிவடைந்த அனைத்து தரப்பினருக்கும் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது இத்திட்டம் சீரிய முறையில் சிறப்பாக செயல்படுதத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் அனைத்து ஓய்வூதியத் திட்டங்களுக்கும் அரசு ஒரே சீராக மாதம் **₹1,000** வழங்கி வருகிறது. ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை **2018–2019** ஆம் ஆண்டிற்கு **₹4,029.78** கோடியாக உயர்ந்துள்ளது. **31.03.2018** அன்று உள்ள பதிவுகளின்படி **29.20** இலட்சம்

பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்:–

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31.03.2018 |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 12,60,876 |
| 2. | இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனாளி ஓய்வூதியத் திட்டம் | 57,723 |
| 3. | இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 5,20,139 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,37,470 |
| 5. | ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் | 4,13,732 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 2,93,124 |
| 7. | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,11,406 |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21,232 |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | 4,328 |
| | **மொத்தம்** | **29,20,030** |

## 6.2 மத்திய மற்றும் மாநில அரசால் வழங்கப்படும் பங்கீடு

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வயது | மைய அரசின் பங்கீடு (₹) | மாநில அரசின் பங்கீடு (₹) |
|---|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 60 வயது முதல் 79 வயது | 200 | 800 |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | 500 | 500 |
| 2. | இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனாளி ஓய்வூதியத் திட்டம் | 18 வயது முதல் 79 வயது வரை | 300 | 700 |
| 3. | இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 40 வயது முதல் 79 வயது வரை | 300 | 700 |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | – | 1,000 |
| 5. | ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | – | 1,000 |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | – | 1,000 |
| 7. | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | – | 1,000 |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | – | 1,000 |

**6.3 தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:—**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் | **தகுதி:** ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். **வருமானம்:** வறுமைக் கோட்டிற்குக் கீழ். **வயது:** 60 வயது மற்றும் அதற்கு மேல். |
| 2. | இந்திரா காந்தி தேசிய விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | **தகுதி:** ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். **வருமானம்:** வறுமைக் கோட்டிற்குக் கீழ். **வயது:** 40 வயது மற்றும் அதற்கு மேல். |
| 3. | இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | **வருமானம்:** வறுமைக் கோட்டிற்குக் கீழ். **வயது:**18 வயது மற்றும் அதற்கு மேல். **ஊனம் நிலை:** 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் |

**6.4 தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:–**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | **வயது:**18 வயது மற்றும் அதற்கு மேல்.<br>**ஊனம் நிலை:** 40 மற்றும் அதற்கு மேல்<br>**தகுதி:** அரசு, அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவராக இல்லாமலும், நிரந்தர அடிப்படையில் தனியார் துறையில் முறையாக மாத வருமானம் பெறுபவராகவோ அல்லது சுய தொழில் செய்பவராகவோ இருக்கும்பட்சத்தில் அவர்களது ஆண்டு வருமானம் ₹3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 2. | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | **தகுதி:** ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.<br>**வயது:**18 வயது மற்றும் அதற்கு மேல்.<br>**அசையா சொத்து:** ₹50,000க்கு மிகாமல். |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியத் திட்டம் | **தகுதி:** ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>**வயது:** 60 வயது மற்றும் அதற்கு மேல்.<br>நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல்.<br>**அசையா சொத்து:** ₹50,000க்கு மிகாமல். |
| 4. | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | **தகுதி:** ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>**வயது:** 30 வயது மற்றும் அதற்கு மேல்.<br>சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும். அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவுச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அசையா சொத்து:** ₹50,000க்கு மிகாமல். |
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | **தகுதி:** திருமணமாகாத ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>**வயது:** 50 வயது மற்றும் அதற்கு மேல்.<br>திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>**அசையா சொத்து:** ரூபாய் 50,000க்கு மிகாமல். |

மேலும், உயிர்ப்புள்ளி விவரங்கள் அடிப்படையிலான அட்டையைப் பயன்படுத்தி, உரிய பயனாளிகளை கண்டறிந்து உறுதி செய்யப்பட்டு வங்கியின் மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி **31.03.2018** அன்றைய தேதியில், **29,20,030** பயனாளிகள் வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

## 6.5 ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் இதர பயன்கள்

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும் பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

## 6.6 ஓய்வூதியதாரர்களுக்கு அரிசி வழங்கும் திட்டம்

இத்திட்டங்களின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா சன்னரக அரிசி வழங்கப்படுகிறது:—

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்ன ரக அரிசி.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்ன ரக அரிசி.

*****

## அத்தியாயம் – 7

## முடிவுரை

குழந்தைகள், பெண்கள், மூத்த குடிமக்கள், மூன்றாம் பாலினர் என சமூகத்தில் உள்ள அனைத்து நலிந்த பிரிவினரின் சமூக பொருளாதார முன்னேற்றத்தினை அவர்களது வாழ்வில் கொண்டு வர சமூகநலத்துறை அயராது பாடுபடுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் முழு வளர்ச்சியையும், முதியோர் மற்றும் மூன்றாம் பாலினருக்கு கௌரவமான வாழ்க்கையினையும் உறுதி செய்யும் வகையில் பலவிதமான நலத் திட்டங்களை முனைப்புடன் வடிவமைத்து இத்துறை செயல்படுத்தி வருகிறது. மேலும், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் மற்றும் ஒழுக்கரீதியான அபாயங்களுக்கு உட்பட நேரிடும் மகளிர் ஆகியோரின் நலனுக்காகவும் இத்துறை பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அத்துடன் பல்வேறு சமூக நலச் சட்டங்களை உரிய இயக்கமைப்புடன் குறித்த நேரத்திற்குள் செயல்படுத்துவதால் இடருற்ற பிரிவினர் தங்களது உரிமையை பெறவும் இத்துறையின் செயல்பாடு துணை நிற்கிறது.

குழும இயக்ககம் அனைத்து நிலைகளிலும் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாய பங்களிப்புடன், அனைத்து நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளை சென்றடைந்திடும் வகையில் செயல்படுகிறது.

சமுதாயத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்தும் விதத்தில் சமூகநலத்துறையின் செயல்பாடுகள் இருப்பதால், தமிழகம் நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

**Dr.V.சரோஜா**
**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**

## இணைப்பு

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2018–2019

## மானியக் கோரிக்கை எண்.45

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ₹ 5,61,162 இலட்சம்.

| 2018–2019 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | (₹இலட்சத்தில்) |
| வருவாய் பகுதி | | ஒதுக்கீடு |
| 2059 | பொதுப் பணிகள் | 271.75 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 33.03 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 14,784.10 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 1,09,174.48 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 41,020.35 |
| 2236 | தலைமைச் செயலகம் | 29.31 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 1,74,771.58 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,17,573.24 |
| 2251 | தலைமைச் செயலகம் | 570.45 |
| 2551 | சமூக நல இயக்ககம் | 0.01 |
| **வருவாய் பகுதி மொத்தம்** | | **5,58,228.27** |

| | | |
|---|---|---|
| மூலதனப் பகுதி | | |
| 4235 | சமூக நல இயக்ககம் | – |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 934.00 |
| 4236 | சமூக நல இயக்ககம் | 0.01 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,000.00 |
| **மூலதனப் பகுதி மொத்தம்** | | **2,934.01** |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 0.02 |
| **கடன் பகுதி மொத்தம்** | | **0.02** |
| **பெரு மொத்தம்** | | **5,61,162.30** |

| | | |
|---|---|---|
| **பெரு மொத்தம்** | **:** | |
| **வருவாய் பகுதி** | **:** | ₹5,58,228.27 இலட்சம் |
| **மூலதனப் பகுதி** | **:** | ₹ 2,934.01 இலட்சம் |
| **கடன் பகுதி** | **:** | ₹ 0.02 இலட்சம் |
| **மொத்தம்** | **:** | **₹ 5,61,162.30 இலட்சம்** |
| | | **அல்லது** |
| | | **₹ 5,611.62 கோடி** |

**2018–2019**ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.**41**ன் கீழ் ₹ **3,881.66** கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*******